Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி-22 | 07-09-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை -202

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10149) T.P: 024-222 4247


— தேர்தலின்போது வழங்கப்பட்ட —

# வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியாது போனால் பதிலாக யுத்தத்திற்கு இட்டுச்செல்ல வேண்டாம்

## அரசாங்கத்திடம் ரணில் வலியுறுத்து

(கொழும்பு)

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற முடியாது போனால் அதற்குப் பதிலாக நாட்டை யுத்தம் ஒன்றிற்கு இட்டுச்செல்ல வேண்டாமென எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தற்போதைய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

ஸ்ரீகோத்தாவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஐம்பத்தெட்டாவது ஆண்டு நிறைவு விழாவின் போது உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில்; நிறைவேற்ற முடியாத உறுதிமொழிகளை ஐக்கிய தேசியக்கட்சி மக்கள் மத்தியில் முன்வைக்கவில்லை.

எதிர்க்கட்சி என்றவகையில் நாட்டு மக்களின் சனநாயக உரிமையைப் பாதுகாக்கும் உரிமை எமக்கு உள்ளது.

இதனை முன்னெடுத்துச் செல்வதற்கும், மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. இவற்றை ஞாபகப்படுத்த வேண்டும். மக்கள் இன்

(12ஆம் பக்கம் பார்க்க)



## தமிழ் மாணவர் ஒன்றியத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மாணவர் ஒன்றிய யாழ். மாவட்ட அலுவலகம் நேற்றுக் காலை 10.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வின் முதல் நிகழ்வாக பொதுச் சுடரினைச் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் கண்ணன் ஏற்றினார். தொடர்ந்து தேசியக் கொடியினைத் தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் ஏற்றினார். தமிழ் மாணவர் ஒன்றிய பெயர்ப்பலகையை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் ர.மோகனதாஸ் திரை நீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து யாழ் மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் ப.குணேந்திரன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாயின. ஆசியுரையை நல்லூர் ஆதீன முதல்வர், வடகிழக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுச் செயலாளர் கருணாரட்ணம் அடிகளார் ஆகியோர் நிகழ்த்தினார். பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் மோகனதாஸ் தனது பிரதம விருந்தினர் உரையை

(12ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக ஒக்டோபர் முதல்வாரம் விவாதம்

### - கட்சித்தலைவர்கள் மாநாட்டில் இணக்கம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பான பாராளுமன்ற ஒத்திவைப்பு விவாதம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் இடம்பெறவுள்ளது. இதற்கான இணக்கம் நேற்று சபாநாயகர் வி.ஜே.மு லொக்குபண்டாரவின் தலைமையில் நடைபெற்ற கட்சிதலைவர்களின் கூட்டத்தில் எட்டப்பட்டது. ஜாதிக ஹெல உறுமய இந்த விவாதத்துக்கான அனுமதியைக் கோரியிருந்தது. இதேவேளை இன்று நடைபெறும் பாராளுமன்ற அமர்வில் வெளிநாட்டவர்களுக்கு காணிஉரிமைகளை கொடுக்கும் போது அதற்கு 100 வீத வரியை அறிவிடுவது தொடர்பான விவாதம் நடைபெறுகிறது. இதில் ஜாதிக ஹெல உறுமய அர

(12ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமானை இணைப்பதுகுறித்து ஐ.ம.சு.மு க்குள் கருத்து வேறுபாடு

ஆறுமுகம் தொண்டமானை அரசாங்கத்தில் இணைத்துக் கொள்வது தொடர்பிலும் வேறு விடயங்களிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில பல்வேறுபட்ட கருத்து மோதல்கள் ஏற்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்தமைக்கு இடைக்கால நிாவாகத்தை அரசாங்கம்நடைமுறைப

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் புலிகளின் புதிய முகாம் என்ற அரசின் குற்றச்சாட்டை க.கா.குழு நிராகரிப்பு

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் புதிய முகாம்களை அமைத்துள்ளார்கள் என்ற கூற்றில் உண்மையெதுவும் இல்லை என போர் நிறுத்தக்கண்காணிப்பு குழு தெரிவித்துள்ளது. அண்மைக் காலமாக அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது இவ்வாறான குற்றச்சாட்டை சுமத்திவந்தது. எனினும் இந்தக் கூற்றை மறுத்துள்ள போர் நிறுத்தக்கண் காணிப்புக் குழு தமிழீழ விடு தலைப்புலிகள் தமது பிரதேசங்களிலேயே முகாம்கள் அமைந்திருப்பதாகவும் அரசாங்கப் பிரதேசங்களில் எவ்வித முகாம்களும் அமைக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது. (32)

## புலிகள் -படையினர் சந்திப்பு பிற்போடப்பட்டதாக அறிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவ அதிகாரிகளுக்கும் இன்று நடைபெறவிருந்த சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளது. இது குறித்து கருத்துத் தெரிவித்த மாவட்டக் கண்காணிப்புப் பிரதிநிதி அடுத்த சந்திப்பிற்கான திகதி இது வரை தீர்மானிக்கப்பட வில்லையெனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இப்பேச்சு வார்த்தைக்கான ஒழுங்குகளை மேற்கொண்டு விட்டு நோர்வே சென்ற போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ரொன்புறூவ்ஹொவ்டேயும் நேற்றுவரை கொழும்பு திரும்பவில்லை யெனவும், இன்று இரவு 12 மணிவரை திரும்புவதற்கான தகவல் எதுவுமில்லை எனவும் கொழும்பு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத் தகவல்கள் கூறுகின்றன. (32)

## வல்லைவெளி எலும்புகூடு தொடர்பில் இன்று வைத்திய அதிகாரி ஆய்வு

வல்லை வெளிப்பகுதியிலுள்ள சேமக்காலையொன்றின் அருகே மனித எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இன்று சம்பவ இடப்பகுதியில் சட்ட வைத்திய அதிகாரியின் முன்னிலையில் ஆய்வுகள் இடம்பெறவுள்ளது. இவ் எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பாக நீதிமன்றின் கவனத்திற்கு எவரும்

(12ஆம் பக்கம் பார்க்க)



கடற்படையின் தாக்குதலைக் கண்டித்து

## முல்லை அரச செயலகம் நோக்கி இன்று கடற்றொழிலாளர் பேரணி

கடந்த முதலாம் திகதி முல்லைத்தீவு மாத்தளன் கடற் பகுதியில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நால்வர் மீது சிறிலங்காக் கடற்படை மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டித்து மாபெரும் கண்டனப் பேரணி இன்று முல்லைத்தீவில் நடைபெறவுள்ளது. முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைமையின் கீழ் அதன் கிளைச் சங்கங்களும் இணைந்து மாலை மூன்று மணிக்கு இக் கண்டனப் பேரணியும், மகஜர் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

மாலை மூன்று மணிக்கு முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர்களின் கூட்டுறவு சங்கங்களின் சமாச காரியாலயத்திற்கு முன்பாக இருந்து ஆரம்பமாகும் இக் கண்டனப் பேரணியானது முல்லைத்தீவு அரச செயலகத்தில் முடிவடைந்து அங்கு முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர்களின் கூட்டுறவு சங்கங்கள் சமாசத்தால் தயாரிக்கப்பட்ட தமது கோரிக்கை அடங்கிய மகஜரை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமல்டா சுகுமாரிடம் கையளிக்கவுள்ளனர். (08)


**மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு**

தமிழீழ நிதிகடன் மீளளிப்புக்குத் தெரிவானோர் விபரம் உள்ளே

# புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் புதிய கட்டடங்கள் திறந்துவைப்பு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு வகுப்பறைக் கட்டடங்களும ஆய்வு கூடக் கட்டடமும் நேறறுக் காலை திறந்து வைக்கப்பட்டன.



(படங்கள் தவரட்ணம்)

காலை 11.30 மணிக்கு இந் நிகழ்வு ஆரம்பமானது. மகாவித்தியாலயத்திற்கு புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியிலிருந்து செல்லும் சந்தியிலிருந்து இந்நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள், பாண்ட் வாத்திய இசையுடன் மாணவர்கள் அணிவகுத்து நிற்க, பாடசாலைக்கு அழைத்துச் செல்லப் பட்டனர்.

அங்கு புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய அதிபர் பி.கே சிவலிங்கம் தலைமையில் நிகழ்வுகள் இடம் பெற்றன. மங்கல விளக்கினை புதுக்குடியிருப்புப் பங்குத்தந்தை வணபிதா லூயில் மொன்போட் அடிகளார் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய ஆசிரியர் சடாச் சரசர்மா ஆகியோர் ஏற்றிவைக்க, தேசியக் கொடியை முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து பாடசாலைக் கொடியை பாடசாலை அதிபர் ஏற்றிவைத்தார்.

இதனை அடுத்துப் பாடசாலைக கட்டடத்திற்கான கல்வெட்டினை வடக்கு கிழக்கு சமுதாய மீள மைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் திட்டப்பணிப்பாளர் த.லங்காநேசன் திரைநீக்கம் செய்து வைக்க தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளா வெ.இளங்குமரன் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இரண்டாவது கட்டடத்தினை முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். தொடர்ந்து ஆய்வு கூடத தின் கல் வெட்டினை மாகாணக் கல்விப்பணிப்பாளர் இ.விசாகலிங்கம் திரைநீக்கம் செய்துவைக்க ஆய்வு கூடத்தின் ஒருபகுதியை வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினா ச.கனகரத்தினம் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். தொடந்து மற்றையத் தொகுதியை தமிழீழ நீதிநிர்வாகப் பொறுப்பாளர் சி.பரா நாடாவை வெட்டித்திறந்து வைத்தார்.

தொடர்ந்து வரவேற்புரை இடம பெற்றது. இதனை புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய துணை அதிபர் திருமதி குணசிங்கம் நிகழ்த்த ஆசியுரையினை தமிழீழ நீதிநிர்வாகப் பொறுப்பாளர் பரா, புதுக்குடியிருப்பு பங்குத்தந்தை ஆகியோர் நிகழ்த்தினர்.

அடுத்து முல்லைவலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா, முல்லை.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன், பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், முல்லை.மாவட்ட அரசாங்க அதிபா திருமதி இமெல்டா சுகுமார், தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் ஆகியோர் உரையாற்ற, தொடர்ந்து சிறப்புரையை வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் திட்டப்பணிப்பாளர் த.லங்காநேசன் ஆற்றினார்.இந்நிகழ்வில் நிகொட் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் எனப் பெரு மளவானவர்கள் கலந்து கொண் டனர். (08)

## மன்னார் உப்பள ஊழியர்களை பிணையில் செல்ல அனுமதி

(மன்னார்)

கடந்த மாதம் மன்னார் உப்பளத்தில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாகக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட மன்னார் உப்பள முகாமையாளர் மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர் இருவர் உட்பட மூன்றுபேரையும் கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் நீதிமன்றத்தின் முன்நிறுத்தியபோது அவர்களைச் சீரப் பிணையில் செல்ல மன்னார் நீதிபதி அனுமதித்தார். இவர்களை எதிர்வரும் முதலாம திகதி மேற்படி நீதிமன்றில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (மி)

## மன்னார் மாவட்டத்தில் சின்னமுத்துத் தடுப்பூசி ஏற்றல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் எதிர்வரும் 9ஆம் திகதியிலிருந்து 12ஆம் திகதி வரை சகல மருத்துவ நிலையங்களிலும் 1983ஆம் ஆண்டு தொடக்கம் 1988ஆம் ஆண்டுகளுக்குமிடையில் பிறந்த 16 வயதுக்கும் 20 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு சின்ன முத்து ருபெல்லா தடுப்பு மருந்து வழங்கப்படுமென்று மன்னார் மாவட்டச் சுகாதாரத் திணைக்களப் பொது அமைப்பு அறிவித்துள் ளது. (மி)

## சாரதி பதவிக்கான விண்ணப்பம் கோரல்

கரைதுறைப்பற்று ப.நோ.கூ சங்கத்தின் சாரதி பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் தலைவர், கரைதுறைப்பற்று ப.நோ.கூ சங்கம், முல்லைத்தீவு எனும் முகவரியிட்டு 15.09.2004 ஆம் திகதி ந.பகல் 12.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலம் விண்ணப்பிக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

பதவி:– வாகன சாரதி 312/3

சம்பள அளவுத் திட்டம் :– 31/99.

4000 - 75 X 10 - 80 X 10 = 5550

தகைமை:– எட்டாம் வகுப்புச் சித்தியும், சகல வாகனங்களும் செலுத்தத்தக்க சாரதி அனுமதிப்பத்திரமும், இரண்டு வருடத்திற்கு குறையாத அனுபவமும்.
சிறந்த கண்பார்வை, தேக ஆரோக்கியம் உடையவராய் இருத்தல் வேண்டும்.

வயது :– 25 – 45

குறிப்பு :– விண்ணப்பித்த தகைமைகள் யாவும் போட்டோப் பிரதிகளுடன் இணைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
கரைதுறைப்பற்று ப.நோ.கூ சங்கம்,
முல்லைத்தீவு.
(சி.10213)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 05 07 1945



உதிர்வு 08 08 2004

அமரர்

## பரமசாமி மகேந்திரன்

எமது குடும்பத்தலைவனின் திடீர் மறைவால் எம்முடன் நேரில் துயர் பகிர்ந்தோரையும் தவிர்க்க முடியாத காரணங்களால் துயர் பகிர முடியாது போனவர்களையும், இன்று (07.09.2004) அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறோம்.

தகவல்
மனைவி பிள்ளைகள்
(சுதர்சன், சுகிர்தன், சுமிர்தன்
சுகந்தன், சுஜிதா.)

65R, பகுதி – 01,
விசுவமடு.

(5036)

## வீரவணக்கம்

## 3ஆம் ஆண்டு நினைவலைகளில்

தாயின் மடியில் 27 ★ 06 ★ 1971



தாயக மண்ணில் 07 ★ 09 ★ 2001

## தமிழீழத் தேசியத்துணைப்படை வீரர் ந.நந்தகுமார்

நி.மு. :- யாழ். மாவட்டம்
த.மு. :- இல 225,04ஆம் யூனிற், தருமபுரம்.

07.09.2001 மணலாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின் போது வீரச்சாவடைந்தார், இம் மாவீரருக்கும் இந்நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"தமிழீழ காவல்துறை சிறப்புப்படையணியினர்" (5034)



ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்க இராணுவ வாகன தொடரணி மீது மோட்டார் தாக்குதலை நடத்த தயாராகிக் கொண்டிருக்கும் தீவிரவாதிகள்.

# இராணுவ வாகன தொடரணி மீது

# ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல்

## 07அமெரிக்கப்படையினரும் 03 ஈராக்கியப்படையினரும் பலி

(பாக்தாக்)

**பாக்தாக்கில் அமெரிக்க இராணுவ அணி மீது தீவிரவாதிகள் மேற்கொண்ட தற்கொலைத்தாக்குதலில் ஏழு அமெரிக்கப்படையினரும், மூன்று ஈராக்கியப் படையினரும், கொல்லப்பட்டுள்ளதோடு, இரண்டு இராணுவ வாகனங்களும் முற்றாக எரிந்துள்ளன.**

குண்டு பொருத்தப்பட்ட காரை தற்கொலைப் படையாளி ஓட்டிச் சென்று அமெரிக்க இராணுவ வாகன தொடரணிமீது மோதி வெடிக்கச் செய்துள்ளார். நேற்று பலூஜா நகரில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குண்டு வெடித்ததும் குண்டு பொருத்தியிருந்த காரின் இயந்திரம் சில மீற்றர் தூரத்திற்கு தூக்கி எறியப்பட்டிருந்தது.

கடந்த ஏப்பிரலில் பலூஜா நகரை மூன்று வாரகாலம் முற்றுகையிட்டிருந்த அமெரிக்கப்படையினர் முற்றுகையை விலக்கியதிலிருந்து அவ்வூரில் ரோந்துப்பணியில் ஈடுபடவில்லை.

இந்த ஆண்டு "மே" மாதத்திலிருந்து அமெரிக்கப்படையினருக்கு அதிக இழப்பு ஏற்பட்ட ஒற்றைச் சம்பவம் இதுவாகும்.

# இரு பற்றரிகளால் 3 மணி நேரம் மூடப்பட்ட அமெ. லொஸ் ஏஞ்சல் விமானநிலையம்

## பதினேழு விமான சேவைகள் இரத்து


(வோஷிங்டன்)

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல் விமான நிலையத்தில் சக்ததிவாய்ந்த இரண்டு பற்றரிகள் உரசுப்பட்டதினால் ஏற்பட்ட வெடிச்சத்தத்தால் விமான நிலையத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டு மூன்று மணித்தியாலங்கள் மூடப்பட்டது.

இவ்வெடிப்புச் சம்பவம் தீவிரவாதிகளின் தாக்குதலாக இருக்கலாமென்ற பரபரப்பு ஏற்பட்டது. ஆனால் அமெரிக்க உளவு நிறுவனம் விசாரணை மேற்கொண்டதில் பற்றரிகள் ஒன்றின் மீது ஒன்று உரசுப்பட்டதால் வெடித்தது தெரிய வந்தது.

இதேவேளை பயணிகளில் ஒருவர் வைத்திருந்த கைப்பையிலிருந்து குண்டு வெடித்ததாக சந்தேகம் ஏற்பட்டதையடுத்து குறிப்பிட்ட பயணியிடம் தீவிரவிசாரணை மேற்கொள்ளப்பட்டது. பின்னர் வெடிப்பிற்கான காரணம் அறிந்ததும் அவர் மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணை விலக்கப்பட்டது.

இச்சம்பவத்தால் 30 இற்கு மேற்பட்ட விமானங்கள் புறப்படுவதில் தாமதம் ஏற்பட்டதுடன், 17 விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டன.



"சுற்றிவளைப்புத் தேடுதல் வேண்டாம்" "புதிய ஈராக் வேண்டும்" "சுதந்திரமான குடியரசு வேண்டும்" என்ற வாசகத்துடனான சுலோகத்தை ஏந்தி பாக்தாத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தும் ஈராக்கிய மக்களைத் தடுத்து நிறுத்தும் அமெரிக்க இராணுவம்.



ரஷயா பெஸ்லன் நகரப் பாடசாலையில் ஆயிரத்துக்கு அதிகமானோரைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்த செச்சினியத் தீவிரவாதிகளில் ஒருவரைக் கைது செய்துள்ள ரஷ்யப் படையினர்.

# கோரச்சம்பவம் நிகழ்ந்த பாடசாலையை நினைவாலயமாக்க ரஷ்ய அரசு முடிவு

ரஷ்யாவின் பெஸ்லான் நகரில் கோரச்சம்பவம் நிகழ்ந்த பள்ளிக் கட்டடத்தை நினைவாலயமாக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. சேதமடைந்த இந்தப் பள்ளிக்கட்டடத்திற்குப் பதிலாக வேறு இடத்தில் விரைவில் பள்ளிக்கட்டடம் கட்டித் தரப்படுமென்று வடக்கு ஒசேசியன் மகாண அரசு செய்தித் தொடர்பாளர் துகயெவ் தெரிவித்துள்ளார். இந்த பள்ளிக்கட்டடத்தில் தீவிரவாதிகள் புதைத்து வைத்திருந்த கண்ணி வெடிகள் முற்றிலுமாக அகற்றப்பட்டதை அடுத்து ஞாயிற்றுக்கிழமை அங்கு பொதுமக்கள் செல்ல அனுமதி அளிக்கப்பட்டனர். உயிர் இழந்தவர்களின் உறவினர்களும், பெற்றோர்களும் அங்கு சென்று மலர்களையும், குடிநீர்ப் போத்தல்களையும் வைத்து அஞ்சலி செலுத்தினர். கடும் வெயிலில் தீவிரவாதிகள் தாங்கள் பிடித்து வைத்திருந்த குழந்தைகளை குடிநீர் அருந்தக்கூட அனுமதிக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 338ஆக உயர்ந்துள்ளது. வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்றுவரும் 448பேரில் 69பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.



# காத்மண்டுவில் ஊரடங்கு தளர்வு

(காத்மண்டு)

நேபாளத் தலைநகரான காத்மணடுவில் கடந்த வாரம் முதல் அமுலில் இருந்த ஊரடங்குச்சட்டம் நேற்றுக் காலை நீக்கப்பட்டுள்ளது.

ஈராக்கிலுள்ள ஜோர்தான் நிறுவனம் ஒன்றிற் கடமையாற்றிய 12 நேபாளத் தொழிலாளர்களையும் ஈராக்கியத் தீவிரவாதிகள் கடந்த புதன்கிழமை படுகொலை செய்ததைத் தொடர்ந்து காத்மண்டுவில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து நேபாள அரசு ஊரடங்குச்சட்டத்தை அங்கு பிரகடனம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.



தென்மேற்கு சீனாவில் கடும் மழையுடன் கூடிய புயற் காற்றினால் 90 பேர் உயிரிழந்ததோடு 77 பேர் காணாமற் போயுள்ளனர் அத்துடன் பல மில்லியன் டொலர் சேதம் ஏற்பட்டுள்ளது.

# எந்த நாட்டின் தாக்குதலையும் சமாளிக்க பாகிஸ்தான் இராணுவம் தயாராக உள்ளது

## சனாதிபதி பர்வேஷ் முஷாரப்

(இஸ்லாமபாத்)

எந்தவொரு நாட்டின் தாக்குதலையும் சமாளிக்க பாகிஸ்தான் இராணுவம் எப்போதுமே தயாராக உள்ளதாகப் பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ்முஷாரப் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் நாட்டில் இராணுவ தினம் நேற்றுக் கடைபிடிக்கப்பட்டது. இதனையொட்டி பர்வேஷ் முஷாரப் விடுத்துள்ள அறிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அஜீஸ் விடுத்துள்ள செய்தியில் பாகிஸ்தான் அமைதியை விரும்பும் நாடாக இருக்கும் போதிலும் வலிமையான பாதுகாப்பு அதற்கு அவசியமென்று குறிப்பிட்டுள்ளதுடன் பாகிஸ்தானில் பொருளாதார நெருக்கடி இருந்த போதிலும் முப்படைகளையும் வலிமைப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

# முல்லைத்தீவு நகரச் சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்க ஒத்துழைக்குக!

–பிரதேச சபை செயலாளர் வேண்டுகை

(முல்லை)

**முல்லைத்தீவு நகரப்பகுதியைச் சுத்தமாக வைத்திருக்க உதவுமாறு பிரதேசசபைச் செயலாளர். இ.கிருஷ்ணபிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

1990ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இந்த நகரம் தற்போது சிறுகச் சிறுக புத்துயிர் பெற்று வருகிறது. சிறிய விஸ்தீரமான இந்த நகரத்தில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் அலுவலகங்களும் நிர்மாணிக் கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் நகரத்திலுள்ள சில வெற்றுக்காணிகள் துப்புரவு செய்யப்படாமல் பற்றைகள் வளர்ந்து மூடிக்கிடக்கின்றது. இதனால் இந்த இடங்கள் விஷ ஜந்துக்கள் வாழும் இடங்களாகத் திகழ்கின்றன.

குறிப்பாக கோயிற்குடியிருப்பு, கரைச்சிக்குடியிருப்பு, மணற் குடியிருப்பு, வண்ணாங்குளம் ஆகியமையக் கிராமங்களில் பற்றைகள் வளர்ந்து சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்துவதுடன் அயலில் குடியிருக்கும் மக்களுக்கும் நகரில் நடமாடும் மக்களுக்கும் பெரும் இடஞ்சலாகவும் அசௌகரியங்களையும் ஏற்படுத்துகின்றது.

எனவே இவ்வாறானதாக விடப்பட்டிருக்கின்ற காணிகளின் உரிமையாளர்கள், குத்தகைக்காரர் அல்லது பின் உரித்துக்காரர்கள் அவற்றைத் துப்புரவாக்கி எல்லைகளை அடையாளமிட்டு வைக்குமாறு கரைதுறைப்பற்று பிரதேச சபைச் செயலாளர் கேட்டுக்கொள் கின்றார்.


தவறும் பட்சத்தில் இவ்வாறாக கைவிடப்பட்டு பராமரிப்பின்றி பற்றைகள் வளர்ந்து கெடுதலை விளைவிக்கக் கூடிய வெற்றுக் காணிகள், 1987ஆம் ஆண்டின் 15இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் பிரகாரம்சபையால் பொறுப்பேற்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டி ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

எனவே இவ்வாறான நடவடிக் கைகளை தவிர்க்கும் பொருட்டு, எமது நகரை சுத்தமாக வைத்திருப் பதற்காகவும் மழைகாலம் தொடங் குவதற்கு முன்பாக சம்பந்தப்பட்டவர்கள் மேற்குறித்த வகைக் குட்பட்டகாணிகளை துப் புரவாக்கி எல்லைகளிட்டு வைத்துக் கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார். (20)

## நன்கொடை

(திருமலை)

திருகோணமலை பொது வைத்தியசாலையில் விடுதிகளில் தங்கிச்சிகிச்சை பெறும் நோயாளர்கள் குறித்த தரவுகளை பாதுகாத்து வைப்பதற்குத் தேவையான பைல்கவர்களை செலான் வங்கி நன்கொடையாக வழங்கியுள்ளது. (25)



நெடுங்கேணி பிரதேசசபைக்குட்பட்ட வேலன்குளம் கிராமத்தில் அமைக்கப்படும் பொதுநோக்கு மண்டபத்தையே படத்தில் காண்கிறீர்கள். கடந்த 6 மாதங்களுக்கு முன்பாக இதன் கட்டுமானப்பணிகள் ஆரம்பிக் கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (படம்-சோதி, வரன்)

## இந்திய கண்ணிவெடி அகற்றும் குழு மரக்காரம்பளையில் பணி

இந்திய நாட்டின் கண்ணிவெடி அகற்றும் குழுவான சர்வத்திரா அமைப்பு வவுனியா மாவட்டத்தில் ஆறு கிராமங்களில் 3இலட்சத்து 50 ஆயிரம் சதுர மீற்றர் பரப்பளவில் இதுவரை கண்ணி வெடிகளை அகற்றி இருப்பதாக அதன் மேற்பார்வையாளர் ஜே. பன்னீர்செல்வம் தெரிவித்தார். தற்போது தமது அணியினர் மரக் காரம்பளை பகுதியில் கண்ணி வெடிகளை அகற்றி வருவதாகவும் தெரிவித்தார். இதுவரை தமது அமைப்பு ஓமந்தைப் பகுதியில் 29 குண்டுகளையும், 2வாகன தகர்ப்புக் குண்டுகளையும், 48 நிலக் கண்ணி வெடிகளையும் அகற்றியுள்ளதாகவும் தெரிவித்தார். இதேபோன்று சாலம்பைக் குளத்தில் 07 கண்ணிவெடிகளையும், கற்பகபுரத்தில் 14 கண்ணிவெடிகளையும், கணேசபுரத்தில் 43 கண்ணிவெடிகளும், 03 குண்டுகளும் ,சமயபுரத்தில் 03 எறி கணைகளும், மரக்காரம்பளைப் பகுதியில் இதுவரை 33 கண்ணி வெடிகளையும் அகற்றியிருப்பதாக அவர் மேலும்தெரிவித்தார். (21)

## திடீர் மழையால் பெரும் அசௌகரியம் உணவுப் பொருட்கள் நீர் புகுந்துஅழிந்தன!

–வடிகால்கள் புனரமைக்காமையே காரணம்

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேசத்தில் ஏற்பட்டுவந்த கடும் வரட்சியினையடுத்து திடீரென பெய்த குறுகிய நேர கடும்மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் பலர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

29,30ஆம் திகதிகளில் பி.பகல் வேளைகளில் சுமார் ஒன்றரை மணித்தியாலயங்களில் பெய்த கடும் மழையால் வெள்ளம் பாய்வதற்கு வடிகால்கள், மதகுகள் அற்ற நிலையில் வீதிபுனரமைப்பின் போது வீதி உயர்த்தப்பட்டதால் மழைவெள்ளம் சுமார் 2அடி உயரத்தில் முள்ளியவளைபொதுச் சந்தை, அதைஅண்டிய சிகை அலங்கரிப்பு நிலையங்கள் ,பலசரக்குக் கடைகள், தேனீர்ச் சாலைகளுக்குள் புகுந்து பாரிய நட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேற்படி வர்த்தக நிலையங்களில் பலமாவு மூடைகள், அரிசி மூடைகள், சீனி மூடைகள் உட்பட பலபொருட்கள் வெள்ளத்தில் அகப்பட்டுக்கொண்டதுடன் பொதுச் சந்தை வியாபாரிகளின் மரக்கறி மூடைகளும் வெள்ளத்தில் நாசமாகியுள்ளதை அவதானிக்க முடிந்தது.

மேற்படி பகுதி பிரதான வீதி உயர்த்தப்பட்டு தார்பூசப்பட்ட வேளையில் ஏற்கனவேயுள்ள மதகுகள் தூர்வு எடுக்கப்படாமையும்,வெள்ள நீர் ஓட்டத்தைக் கருத்தில் கொண்டு புதியமதகுகள் அமைக்கப்படாமையுமே வெள்ள அழிவுக்குக் காரணம் என அப்பகுதி மக்கள் விசனம்தெரிவித்துள்ளனர்.

வீதி புனரமைப்பு வேலையின் போது மதகு வேலைகள் மேற்கொள்ளப்படாது சம்பந்தப்பட்டவர்கள் அசமந்தப் போக்குடன் உள்ளனர் என அப்பகுதி வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

## வட்டக்கச்சிப் பிரதேச காவல்துறையினரால் குற்றத் தடுப்பு நடவடிக்கை முன்னெடுப்பு

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி காவல் பணி மனைக்கு உட்பட்ட பிரதேசங்களில் காவல்துறையினரின் குற்றத்தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

குற்றத்தடுப்பு நடவடிக்கையின் ஒரு அங்கமாக அண்மையில் சம்புக்குளம் பகுதியில் நான்கரை லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டதுடன் இராமநாதபுரம் காட்டுப் பகுதியில் இருந்து பெருமளவிலான கசிப்பு உற்பத்திப் பொருட்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப் பட்டது.வட்டக்கச்சி காவலர் பணிமனையினர் இவ்வாறான குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கில் இரவுநேர வீதி ரோந்து நடவடிக் கையிலும் ஈடுபட்டு வருகின்றமை இங்குகுறிப்பிடத்தக்கது. (15)



கிளிநொச்சி- வட்டக்கச்சி செல்லும் பிரதான வீதியில் உள்ள 3ஆம் வாய்க்கால் பாலத்தின் இரு மருங்கிலும் ஏற்கனவே உடைந்து போயிருந்த தடுப்புச்சுவர்கள் அண்மையில் மீண்டும் அமைக்கப்பட்டிருந்தன. இதன் ஒரு பகுதி வாகனம் ஒன்றினால் மோதப்பட்டு தற்போது உடைந்திருப்பதை படத்தில் காண்க. (படம்- ரூபன்)

## சனசமூகநிலைய அங்கத்தவர்கள் தலைமைத்துவப் பண்புகளை வளர்ப்பதற்கான பயிற்சிநெறி

கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையினால் அப்பிரதேசத்திற்குட்பட்ட சனசமூகநிலைய அங்கத்தவர்களுக்கான தலைமைத்துவப் பண்புகளை வளர்ப்பதற்கான பயிற்சி வகுப்பொன்று கடந்த 03 ஆம்திகதி கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் பிரதேசசபைச் செயலாளர் இகிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

மங்கலவிளக்கினை வைத்தியர் தவராசாஏற்றினார். தொடர்ந்து தலைமையுரை நடைபெற்றது.

விரிவுரை தொடர்பாடல் தொடர்பாக கரைதுறைப்பற்று பிரதேச சபைச் செயலாளர் இ. கிருஷ்ண பிள்ளை நிகழ்த்தினார்.

தொற்று நோய்களைத் தடுக்கும் வழிமுறைகள் தொடர்பாக பொதுச்சுகாதாரப் பரிசோதகர் நிகழ்த்தினார்.

சனசமூக நிலையங்களின் செயல்பாடுகளுக்கான நிதி மூலங்கள் தொடர்பாக பிராந்திய உ.உதவி ஆணையாளர் வி. கிருஸ்ணசாமி கருத்துக்களைத் தெரிவித்தார். சனசமூக நிலையங்களின் யாப்பு முறைக்கேற்ப தம்மை வளர்த்துக் கொள்ளலும் அவை சமூகஅபிவிருத்தியில் காட்டும் ஆர்வமும் தொடர்பாக சிரேஷ்டசனசமூக உத்தியோகத்தர் சு.முடியப்பு வழங்கினார்.

இந்தப் பயிற்சி வகுப்பில் 23 சனசமூக நிலையங்கள் கலந்து கொண்டன.இதில் அனுமதியின்றி புதிதாக கட்டப்படும் கட்டடங்கள் தொடர்பாகவும் எடுத்துக் கூறப்பட்டது. (20)

## பேருந்திலிருந்து வீழ்ந்ததில் நடத்துனர் படுகாயம்

புளியங்குளத்திலிருந்து முல்லை வந்த பேருந்தில் நடத்துனராகக் கடமையாற்றியவர் பேருந்திலிருந்து தவறி வீழ்ந்ததில் படுகாயமடைந்து முல்லை மாவட்டகட்டம் 1 வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.அன்றைய தினம்மாலை 5-40 மணிக்குப் புளியங் குளத்திலிருந்து புறப்பட்டு முல்லைத்தீவு நோக்கி வந்து கொண்டிருந்த போது தண்ணீரூற்று கற்பகப்பிள்ளையார் கோவிலடியிலேயே இச்சம்பவம் நடைபெற்றது. உடனே படுகாயமடைந்த நடத்துனர் அதே பேருந்தில் ஏற்றிவரப்பட்டு சிகிச்சைக்காக முல்லை மாவட்ட கட்டம் 1 வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (20)

## –புதுக்குடியிருப்புப் பகுதியில்– வைத்தியசாலைக்கு முன்பாக கழிவுப்பொருட்கள் தேக்கம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாக (சுற்றுமதிலுக்கு அருகில்) நீண்ட நாட்களாக கழிவுகள் அகற்றப் படாமல் தேங்கியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இது சுகாதாரத்துக்கு சீர் கேடாகவேயுள்ளது. இக்கழிவுகள் தொடர்ந்தும் அகற்றப்படாமல் இருக்குமாயின், தற்போது பெய்து வரும்மழை காரணமாக இப்பகுதியில் நுளம்புகள் பெருக நிறைய வாய்ப்புண்டு இதனால் மேலும் பல தேவையற்ற விபரீதங்களை மக்கள் எதிர் நோக்க வேண்டிய சூழ்நிலை கூடஉருவாகலாம்.மேலும் நீர் சீரான முறையில் வழிந்தோட முடியாத நிலையில் அப்பகுதியுள்ளது. அப்பகுதியில் கழிவுப்பொருட்கள் உள்ளமையே இதற்குக் காரணமாகவுள்ளது. (08)

## தாயகம் வருகை

இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய 30 ஈழத்தமிழ் அகதிகள தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் மீட்கப் பட்டனர்.இவர்களை சொந்த இடங் களிற்கு அனுப்பிவைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (மி)

# கழிவுப்பொருட்களைப் பயன்படுத்தி உரம் உற்பத்தி செய்ய நடவடிக்கை

## யாழ்.மாநகர சபைக்கு 90 பரப்புக் காணியும் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

**மண்ணுடன் சேதமடையக்கூடிய கழிவுப்பொருட்களைப் பயன் படுத்தி பசளைவகைகளை (உரம்) உற்பத்தி செய்வதற்கான நிலையம் ஒன்று யாழ்ப்பாணத்தில் அமைய உள்ளது.**

உள்ளூர் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி தரம் வாய்ந்த பசளைகளை உற்பத்தி செய்வதுடன் கண்ட இடங்களில் கழிவுகள் கொட்டப்படல், கழிவுகளால் ஏற்படும் சுகாதாரப்பிரச்சினைகள் போன்றவற்றால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவே இந்நிலையத்தை அமைக்கவுள்ளதாக யாழ். மாநகர சபை தெரிவித்துள்ளது.

இவ்வாறான பசளைகளைத் தயாரிக்கும் நிலையத்தை அமைப்பதற்காக காக்கை தீவுப்பிரதேசத்தில் உள்ள 90 பரப்புக்காணியை யாழ்.அரசசெயலகம் யாழ்.மாநகர சபைக்கு வழங்கியுள்ளது. (33)

# தமிழ் இலக்கிய விழா இம்முறை யாழ்ப்பாணத்தில்

வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் ஆண்டுதோறும் நடாத்தப்பெறும் தமிழ் இலக்கியப் பெருவிழா இம்முறை யாழ்ப்பாணத்தில் ஒக்ரோபர் மாதம் 8,9,10ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

இதில் ஈழத்துத் தமிழ் இலக்கிய அறிவியல்துறை நூல்களின் விற்பனையும், கண்காட்சியும் இடம்பெறவிருக்கின்றது. 1990ஆம் ஆண்டிற்குப் பின்பாக வெளியிடப்பட்ட நூல்களை நூலாசிரியர்கள் 10பிரதிகள் வீதம் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். நூல்களை விற்ற பிரதிகளுக்கான பணம்(விற்பனையாளருக்கான கழிவு போக ) நூலாசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

நூல்களை தி.செல்வமனோகரன் ("தூண்டி" இலக்கிய அமைப்பு) 141 கேணியடி திருநெல்வேலி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வடக்கு கிழக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவலர்கள் அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் அறிவித்துள்ளார்.

# குமுதினிப் படகைத் திருத்தம் செய்து சேவையிலீடுபடுத்தக் கோரிக்கை

நெடுந்தீவு -குறிகாட்டுவான் குமுதினிப் படகுச் சேவை 1வருடத்திற்கு மேலாக நடைபெறாததால் தீவக மக்கள் தனியார் படகுகளில் பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர். மேற்படி குமுதினிப் படகு ஊர் காவற்றுறை துறைமுகத்தில் திருத்த வேலைக்காக நிறுத்தப்பட்டு இவ் வேலைகள் ஏதும் நடைபெறாதுள்ளது. இதனால் மக்கள் கவலை அடைந்து வருகின்றனர்.

இனி வரும் காலம் மாரிகாலம் என்பதால் மேற்படி மக்கள் தனியார் படகுகளில் பயணம் செய்ய முடியாத நிலை இருப்பதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து குமுதினிப் படகை சீரமைத்துத் தரும்படி மக்கள் கேட்கின்றனர். (24)

# யாழ்.குடிநீர்விநியோகம் குறித்து ஆராய்வதற்கான விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் குடிநீர் விநியோகத்திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்கான விசேட கூட்டமொன்று நாளை புதன் கிழமை யாழ்.செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

தேசிய குடிநீர் வழங்கல் அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகத்திட்டங்கள் தொடர்பாகவும் மற்றும் சர்வதேச உதவி அமைப்புகளின் உதவியுடன் மீள இயக்கப்பட்ட குடிநீர் விநியோகத் திட்டங்கள் தொடர்பாகவும் இக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ் அரசு அதிபர் தலைமையில் இடம் பெறவுள்ள இக் கூட்டத்திற்கு தொடர்புடைய திணைக்களங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களினதும் தலைவர்களும் தொடர்புடைய சர்வதேச தொண்டரமைப்புக்களது பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டுள்ளனர்.(27)

# யாழ். தேர்தல் மாவட்டத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

யாழ்.தேர்தல் மாவட்டத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது. யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்து கொளவுள்ளனர்.

இதேவேளை இம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்டத்திலுள்ள திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்கள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புக்களது தலைவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக அரசினாலும் மற்றும் சர்வதேச உதவி அமைப்புக்களாலும் வழங்கப்படுகின்ற நிதி உதவியின் கீழ் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதுடன் எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகாரிகளுடன் ஆராயவுள்ளதாகத் தெரியவருகின்றது. (27)

## பிறப்பு, இறப்புச் சான்றிதழ் வழங்குவதில் தாமதம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை காணிப்பதிவகத்தில் உள்ள போட்டோப்பிரதி இயந்திரம் பழுதடைந்துள்ளது. இதனால் பிறப்பு, இறப்பு சான்றிதழ் வழங்குவது தாமதமடைந்துள்ளது.

இதனை உடன் திருத்தி மக்களின் விண்ணப்பங்களுக்கு விரைவில் சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரியை மக்கள் கோரியுள்ளனர்.

# யாழ்.இல் சுயதொழில் முயற்சியை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அமெரிக்க உதவும் நிறுவனத்தின் (யு.எஸ்.எயிட் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சுய தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள யாழ்.குடா நாட்டுமக்களின் பொருளாதார அபிவிருத்திகளை மேம்படுத்துவதனைக் நோக்காகக் கொண்டே இது நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இதன்கீழ் சுயதொழில் முயற்சியாளர்களுக்கான துறை சார் பயிற்சிகள், தொழில் முயற்சிகடன்கள், ஊக்குவிப்புகள் என்பன பெற்றுக்கொடுக்கப்படவுள்ளதுடன் சந்தைப்படுத்தல் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். (33)

## 30 பேர் நாடுதிரும்பினர்

(மன்னார்)

தமிழக அகதிமுகாமில் வசித்துவந்த இலங்கைத் தமிழ் அகதிகளில் 30 பேர் கடந்த வெள்ளிக்கிழமை இந்திய மீன்பிடிப் படகுகள் மூலம் தலைமன்னாருக்குத் திரும்பியுள்ளனர். இவர்களில் 5 குழந்தைகளும் அடங்கியிருந்தனர் இவர்களைச் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்க மன்னார் மாவட்ட நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# சர்வதேச குற்றவாளியான அத்வானி துணைப்பிரதமராக இருந்தது துரதிஷ்டவசமானது

## - அமைச்சர் லல்லுப்பிரசாத்

(புதுடில்லி)

பாகிஸ்தானின் தேசத் தந்தை என அழைக்கப்படும் முகமது அலிஜின்னாவை கொலைசெய்ய சதித்திட்டம் தீட்டிய வழக்கில் தேடப்பட்டு வந்த சர்வதேசக் குற்றவாளியாக இந்திய முன்னாள் பிரதமர் அத்வானியின் பெயர் இணைக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் லல்லுப்பிரசாத் குற்றம் சாட்டியுள்ளார். காட்ணாவில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய லல்லு பிரசாத்,

குற்றப் பின்னணியுள்ள அமைச்சர்களைப் பதவி விலகுமாறு கூறிவரும் பா.ஜ.கவினர் தங்கள் மீதுள்ள கறைகளை முதலில் சுத்தப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கூறினார்.

அலி ஜின்னாவைக் கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டியதாக அத்வானி மீதுள்ள புகார் பற்றி அவர் விளக்கம் தரவேண்டுமென்றும் லல்லு கூறியுள்ளார். சர்வதேச குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட ஒருவர் நாட்டின் துணைப் பிரதமர் பதவியில் இருப்பது துரதிஸ்டவசமான தென்றும் லல்லு பிரசாத்யாதேவ் தெரிவித்தார்.

# ஊடுருவல் குறித்து இந்தியாவின் புகார் பாகிஸ்தானால் நிராகரிப்பு

(புதுடில்லி)

இந்தியாவும் பாகிஸ்தானும் ஞாயிற்றுக்கிழமை நடத்திய பேச்சுவார்த்தையில் பல அம்சங்களில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எனினும் எல்லை தாண்டிய தீவிரவாதத்தைப் பாகிஸ்தான் தூண்டி வருவதாகவும் எல்லையில் பயங்கரவாதிகளின் ஊடுருவல் அதிகரித்துள்ளதாகவும் இந்தியா தெரிவித்த புகாரைப் பாகிஸ்தான் நிராகரித்தது. வெளியுறவு அமைச்சர் கே.நட்வர் சிங்கும் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் கே.எம்.கசூரியும் தனித்தனியாக ஒருமணிநேரம் பேசினார். அதைத் தொடர்ந்து இருதரப்பின் பிரதிநிதிகளும் பேசினர்.

அமைச்சர்கள் சந்தித்துப் பேசியபிறகு நிருபர்களிடம் பேசிய அதிகார வட்டாரங்கள் "நல்லதொடக்கம் ஏற்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டனர். இன்றுடன் பேச்சுவார்த்தை முடிகிறது. அதன் பிறகும் இருதரப்பும் கூட்டறிக்கை வெளியிடும் என்று தெரிகிறது. இருதரப்புக் கடற்படையினரும் ஒத்துழைப்புடன் செயற்படுவது தொடர்பாக உடன்பாடு காண்பதற்கான வாய்ப்புக்குறித்து இருநாடுகளும் ஆராய்ந்தன. ஒட்டுமொத்தப் பேச்சுவார்த்தையை மற்றொரு சுற்று நடத்துவது தொடர்பாகத் தமக்குள்ள விருப்பத்தை இரு அமைச்சர்களும் பேச்சுவார்த்தையின் போது பகிர்ந்து கொண்டனர் எல்லை தாண்டிய பயங்கரவாதம் எல்லையில் தீவிரவாதிகள் ஊடுவல்கள் அதிகரிப்புக்குறித்து பாகிஸ்தானிடம் இந்தியா கவலை வெளியிட்டுள்ளது. பயங்கரவாதிகள் தமது மண்ணில் செயற்பட அனுமதிக்க மாட்டோம் என்று கடந்த சனவரியில் பாகிஸ்தான் தெரிவித்த உத்தரவாதத்தையும் இந்தியா நினைவுபடுத்தியது.

# இந்தியா டுடே கருத்துக்கணிப்பில் ஜெயலலிதா மோசமான முதல்வர்

(புதுடில்லி)

இந்தியாவில் உள்ள மாநில முதல்வர்களில் சிறந்த முதல்வர் யார்? மோசமான முதல்வர் யார்? என்பதை அறிய இந்தியா டுடே இதழும் ஓ.ஆர்.ஜி. மார்க் நிறுவனமும் இணைந்து நடத்திய கருத்துக்கணிப்பில் ஜெயலலிதா கடைசி இடத்திலுள்ளார்.

இந்தக்கருத்துக்கணிப்பு 19மாநிலங்களில் நடந்தது. 97 மக்களவைத் தொகுதிகளில், 291 சட்டசபைத் தொகுதிகளில் உள்ள 17,885 வாக்காளர்கள் மத்தியில் இந்தக் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. அந்தந்த மாநில வாக்காளர்களின் கருத்தையறிந்து அம் மாநில முதல்வர்களின் செல்வாக்குக் கணிக்கப்பட்டது.

சிறந்த முதல்வர், மோசமான முதல்வர் என்பதைத் தீர்மானிக்க இக்கருத்துக்கணிப்பின் போது முதல்வர்களின் நேர்மை, நம்பகத்தன்மை ஆகியவற்றுக்கு முன்னுரிமை தரப்பட்டது. தமிழகத்தை இந்தியாவிலேயே முதல்இடத்திற்குக் கொண்டுசெல்லப் போவதாக பெருமைப்பட்டுக் கொள்ளும் முதல்வர் ஜெயலலிதா இந்தியாவிலே மிகமோசமான முதல்வர் என்று இந்தக் கருத்துக்கணிப்பில் கண்டறியப்பட்டுள்ளது. அனைத்து முதல்வர்களிலும் கடைசி இடம் ஜெயலலிதாவுக்குத்தான் கிடைத்திருக்கிறது. தொடர்ந்து 4ஆவது ஆண்டாக இந்தக் கருத்துக்கணிப்பு நடந்துள்ளது. 4தடவையும் ஜெயலலிதாவுக்கே கடைசிஇடம் என்பது குறிப்பிடத்தக்கது. ஜெயலலிதா கடைசி இடத்திற்கு ஏன் தள்ளப்பட்டார் என்பதற்குக் கருத்துக் கணிப்புக்குழுவினர் கூறியுள்ள காரணங்கள் வருமாறு,

பழிவாங்கும் போக்கு, வருமானத்திற்கு அதிகமான சொத்துச் சேர்த்த வழக்கு உட்பட சில ஊழல் வழக்குகள் ஜெயலலிதாவுக்கு எதிராகவுள்ளன. அரசியல் எதிரிகளை இவர் பழிவாங்கிய விதமும், போராடிய அரசு ஊழியர்களை ஒடுக்கிய விதமும் தனக்கு எதிரான ஊடகங்களின் விமர்சனங்களைச் சகித்துக் கொள்ளாதபோக்கும் இவருடைய செல்வாக்கை மிகவும் மோசமாகப் பாதித்துள்ளன. தமிழகத்தின் வளர்ச்சியிருந்தும் நம்பகத்தன்மை இல்லாததால் முதல்வர் ஜெயலலிதா பட்டியலின் கடைசி இடத்தில் இருக்கிறார்.

ஆணவம், எளிதில் அணுக முடியாமை, பழிவாங்கும் அரசியல் போன்றவையும் வாக்காளர்களை முதல்வருக்கு எதிராகத் திருப்பி விட்டிருக்கின்றன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. சிறந்த முதல்வர் என்ற முதலிடத்தை ஓரிசா மாநில முதல்வர் நவீபட்நாயக் இந்தக்கருத்துக் கணிப்பில் பிடித்துள்ளார்.

# சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டணி கலாச்சாரம்

பண்டார நாயக்க பரம்பரைக்கு தேவைப்படும் போது கூட்டணிய மைப்பதற்கும் தேவையில்லாத போது கூட்டணியை முறித்து விடவும் ஏற்றவாறு அமைந்த கட்சியே சிறிலங்கா சுதந்திரக் கட்சியாகும்.

1956 ஆம் ஆண்டு பிலிப் பரம்பரையோடு சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டுச் சேர்ந்து அவர்களை தோளில் சுமந்து கொண்டு நாடு பூராவும் சுற்றித்திரிந்தது. 1959ஆம் ஆண்டு அந்தக் கூட்டு பிளவு பட்டதும் அவர்களை தோலுரித்தது.

1970 ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான கட்சி என்.எம்.பெரேரா, கலாநிதி விக்ரமசிங்கவுடன் கூட்டணியமைத்து அவர்களோடு கை கோர்த்து திரிந்தது. பின்னர் அந்தக் கூட்டணியும் பிளவுபட என்.எம். பெரேரா போன்றோரை கைகழுவி விட்டது.

இன்று நடைபெறுவதும் அதன் மறுபக்கமே. 2004 சனவரியில் ஜே.வி.பி.யுடன் சந்திரிகா தலைமையிலான சுதந்திரக்கட்சி கூட்டணியமைத்து அவர்களை தோளில் சுமக்கிறது. எனினும் ஜே.வி.பி. யினரை சுதந்திரக்கட்சி லிருந்து போகச் சொல்லாமல் புகைபோட்டு விரட்டியும் அவர்களோடு அழுங்குப் பிடியாக பற்றிநிற்கிறது ஜே.வி.பி. அத்துடன் சந்திரிகா தனது கட்சியை புகழ்ந்தும் குறிப்பிட்டிருக்கிறார்.

அஃதாவது ஏனைய கட்சிகளைப் போன்று தனது சுதந்திரக்கட்சி நாட்டில் கொலைகளைச் செய்து கைகளில் இரத்தக்கறைபடிந்த கட்சியல்ல. வெறுமனே தாடி வளர்த்துக் கொண்டு சிவப்புத் தொப்பிகளை அணிந்து நாட்டில் உலாவரவில்லை என்றும் கூறியுள்ளார். இவற்றைக் கேள்விப்பட்டு அநுராபண்டாரநாயக்கவோ, ராஜபக்ஷவோ, ரத்னசிறிவிக்ரம நாயக்கவோ வாயே திறக்காதுள்ளனர். சந்திரிகாவின் இந்தக் கூற்றின் உள்நோக்கம் என்ன?

அதுதான் எதிர்வரும் சனாதிபதித் தேர்தல்.

ராஜபக்ஷ,தான் சனாதிபதியாகப் போட்டியிடலாம் என்று நினைக்கிறார். ஆயினும் தேர்தலில் வெற்றிபெற ஜே.வி.பியின் கூட்டு அவசியம். அதைவிட கூட்டணி வேட்பாளராக போட்டியிடவேண்டுமானாலும் ஜே.வி.பி.யின் ஆதரவு தேவை அதனால் ஜே.வி.பி.யை பகைத்துக்கொள்ளக்கூடாது என்பது அநுரா,ரட்ணசிறி போன்றோரின் கருத்தாகும். ஜே.வி.பி.யினர் என்ன நினைக்கின்றனர்? கூட்டணிக்குள் தனது முத்திரையைப் பதித்து சனாதிபதி வேட்பாளர் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள ஜே.வி.பி. கருதுகிறது.

அநுராவாகட்டும், மகிந்த ராஜபக்ஷவாகட்டும் ரத்னசிறியாகட்டும் அல்லது ஜே.வி.பி. கருதும் ஒருவராகட்டும் ஜே.வி.பி.யின் தாளத்துக் கேற்ப ஆடும் ஒருவரே சனாதிபதி வேட்பாளராக இருக்க வேண்டும்.

சந்திரிகாவுக்கும் இது நன்கு புலப்படும். சனாதிபதித் தேர்தலை தடுக்க முடியாமல் போகுமிடத்து, ஜே.வி.பிக்கு வேண்டிய வகையில் அல்லாது தமக்கோ சுதந்திரக் கட்சிக்கோ வேண்டிய ஒருவரையே அவர் வேட்பாளராக நியமிக்க எண்ணுகிறார். அவர் ஜே.வி.பி.யை போகச் சொல்லாமல் புகையைப் போடுவது அதற்காகவே.



எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்க



சிறிமாவோ

இவரைப் போன்றே அன்று 1988ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலின் போது சிறிமாவோ இவ்வாறான பிரச்சினைக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. அன்றும் அவர் பொது வேட்பாளரை நியமிக்க ஜே.வி.பி.யுடன் பேச்சு நடத்தினார். பேச்சுக்களில் அநுரா கலந்து கொண்டார். பேச்சுக்களின் போது ஜே.வி.பி. நிபந்தனையொன்றை விதித்தது.

அதாவது அரசியல்வாதி அல்லாத ஒருவரை பொது வேட்பாளராக நியமிக்க வேண்டும் என்பதாகும். ஆனால் ஜே.வி.பி. குறிப்பிடும் வேட்பாளர் அவர்களின் விருப்பத்துக்கேற்பவே செயற்படுவார் என்பதை சிறிலங்கா சுதந்திரக் கட்சி அறிந்திருந்ததால் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது. இறுதியில் சிறிமாவோ வேட்பாளராக நியமிக்கப்பட்டார். எனினும் அப்போதும் ஜே.வி.பி.யானது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கை சின்னத்தில் போட்டியிடக்கூடாது என்ற நிபந்தனை விதித்ததுடன் வேறு ஒரு சின்னத்தில் போட்டியிடக்கோரியது. அதற்கு அநுரா பண்டாரநாயக்க தலைமையிலான குழுசம்மதம் தெரிவித்தபோதும் சிறிமாவோ இணங்கவில்லை காரணம் ஒரு வேளை வேட்பாளராக மனுத்தாக்கல் செய்த பின்னர் தான் தாக்குதலில் இறக்க நேரிட்டால் அவருக்குப் பதிலாக ஒருவரை நியமிக்கும் அதிகாரம் ஜே.வி.பி.க்கு கிடைத்துவிடும் என்று சிந்தித்தமையாகும். தான் தோல்வியடைந்தாலும் அதற்கு இடமளிக்கப் போவதில்லை எனக் கருதினார். அத்துடன் தேர்தலில் வென்று சனாதிபதியாக பதவியேற்றால் நிறைவேற்றதிகாரத்தை ஒழித்து ஐ.தே.கட்சிக்கு நல்ல பாடம் புகட்ட அவர் எண்ணினார். ஆயினும் கட்சியை காட்டிக் கொடுக்க அவர் மனம் இடங் கொடுக்கவில்லை. இறுதியில் கை சின்னத்தில் அவர் போட்டியிட்டார்.



இன்று சந்திரிகா எடுக்கும் முடிவுக்கு ஆதரவளிக்கத் தகுந்த ஒருவர் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் கிடையாது.

106. யா/ந/ 4718 திரு. ஐயாம்பிள்ளை ஆறுமுகம் கந்தையா
107. யா/ந/ 4719 திரு. செல்லத்துரை கனகரெத்தினம்
108. யா/ந/ 4765 திரு. சபாபதி வேலாயுதபிள்ளை
109. யா/ந/ 4766 திருமதி. தங்கம்மா சோமசுந்தரம்
110. யா/ந/ 4770 திரு. என்றிஜெகோவரட்னம் உலகசேகரம்
111. யா/ந/ 4830 திரு. முத்துக்குமாரு இரத்தினசிங்கம்
112. யா/ந/ 4894 திருமதி. கனகரஞ்சிதம் வைத்திலிங்கம்
113. யா/ந/ 4911 திரு. சுப்பையா அழகரத்தினம்
114. யா/ந/ 4916 திரு. செல்லப்பா சின்னத்தம்பி
115. யா/ந/ 5018 திரு. சதாசிவம் சிவதாசன்
116. யா/ந/ 5092 திரு. சரவணமுத்து தனபாலசிங்கம்
117. யா/ந/ 5106 திரு. கந்தையா செல்வத்துரை
118. யா/ந/ 5109 திரு. அப்பாத்துரை கைலாயபிள்ளை
119. யா/ந/ 5165 திரு. இரத்தினசிங்கம் துரைவீரசிங்கம்
120. யா/ந/ 5193 திரு. வேலுப்பிள்ளை இரத்தினசபாபதி
121. யா/ந/ 5236 திரு. கதிரவேலு செல்வரத்தினம்
122. யா/ந/ 5295 திரு. அப்பையா கந்தையா
123. யா/ந/ 5304 திரு. வயிரமுத்து சின்னத்துரை
124. யா/ந/ 5325 திரு. சின்னத்துரை திருவிளங்கம்
125. யா/ந/ 5328 திரு. பொன்னையா குமாரசாமி
126. யா/ந/ 5352 செல்வி. சுதா குமாரசாமி
127. யா/ந/ 5378 திருமதி. சிவபாக்கியம் இராசதுரை
128. யா/ந/ 5387 திருமதி. நாகம்மா தில்லையம்பலம்
129. யா/ந/ 5389 திரு. கதிர்காமு கணபதிப்பிள்ளை
130. யா/ந/ 5425 திரு. சிவஞானம் சிவக்கொழுந்து
131. யா/ந/ 5472 திரு. இராசா குமாரசாமி
132. யா/ந/ 5520 திருமதி. லீலாலோகேஸ்வரி குமாரகுலசிங்கம்
133. யா/ந/ 5533 திரு. கதிர்காமர் சுப்பிரமணியம்
134. யா/ந/ 5537 திரு. சபாபதி மார்க்கண்டு
135. யா/ந/ 5541 திரு. சுப்பையா ஆறுமுகம்
136. யா/ந/ 5557 திருமதி. நவரத்தினம்மா சிவஞானம்
137. யா/ந/ 5743 திரு. சின்னத்தம்பி திருவிளங்கம்
138. யா/ந/ 5762 திரு. கனகசபை சின்னத்துரை
139. யா/ந/ 5773 திரு. அப்பாப்பிள்ளை சபாரத்தினம்
140. யா/ந/ 5788 திரு. கந்தையா இராசையா
141. யா/ந/ 5817 திரு. ஆசீர்வாதம் லூத்தையா
142. யா/ந/ 5871 செல்வி. சூரியகுமாரி கந்தையா
143. யா/ந/ 5911 திரு. கந்தையா அசோகன்
144. யா/ந/ 5922 திரு. சண்முகம் சோமசுந்தரம்
145. யா/ந/ 5937 திருமதி. இந்திராதேவி பாலசிங்கம்
146. யா/ந/ 5966 திரு. சரவணமுத்து நல்லையா
147. யா/ந/ 6030 திரு. சிதம்பரப்பிள்ளை செல்லத்துரை
148. யா/ந/ 6075 திருமதி. நல்லம்மா முருகேசு
149. யா/ந/ 6233 திருமதி. செல்லம்மா அருணாசலம்
150. யா/ந/ 6239 திரு. வேலுப்பிள்ளை கந்தையா
151. யா/ந/ 6241 திரு. சின்னப்பு தம்பிராசா
152. யா/ந/ 6278 திரு. நன்னி சிங்கராசா
153. யா/ந/ 6300 திரு. சின்னப்பொடி செல்லையா
154. யா/ந/ 6315 திருமதி. இராசமணி இராசையா
155. யா/ந/ 6321 திரு. தம்பு கனகசபை
156. யா/ந/ 6332 திரு. பொன்னுத்துரை சோமசுந்தரம்
157. யா/ந/ 6451 திருமதி. இரத்தினம் குமாரசாமி
158. யா/ந/ 6472 திரு. கணபதிப்பிள்ளை இளையதம்பி
159. யா/ந/ 6481 திரு. வேலாயுதம் சரவணமுத்து
160. யா/ந/ 6484 திரு. நடராசா ஸ்ரீசோமசேகரம்
161. யா/ந/ 6512 திருமதி. சறோஜினிதேவி மரியதாஸ்
162. யா/ந/ 6515 திருமதி. பாலநாகம்மா குமாரசாமி
163. யா/ந/ 6519 திருமதி. பூரணம் பொன்னம்பலம்
164. யா/ந/ 6530 செல்வி. றெனி மனுவல்ப்பிள்ளை
165. யா/ந/ 6549 திரு. சின்னத்தம்பி ரகுலேந்திரன்
166. யா/ந/ 6554 திருமதி. சறோஜினிதேவி குகேஸ்வரராஜா
167. யா/ந/ 6686 திருமதி. தர்மலதா சத்தியானந்தன்
168. யா/ந/ 6744 திரு. சின்னையா சந்திரசேகரம்
169. யா/ந/ 6747 திரு. இரத்தினசிங்கம் சேனாதிராசா
170. யா/ந/ 6806 திருமதி. ஈஸ்வரி சிவகுரு
171. யா/ந/ 6816 திரு. செல்லத்துரை பாலச்சந்திரன்
172. யா/ந/ 6879 திருமதி. சியாமளேஸ்வரி ஜெகநாதக்குருக்கள்
173. யா/ந/ 6880 திருமதி. பேள்செல்வமணி தம்பியப்பா
174. யா/ந/ 6919 திரு. பொன்னம்பலம் அமரசிங்கம்
175. யா/ந/ 6920 திரு. வைரவி டானியல்
176. யா/ந/ 6922 திரு. ஆழ்வாப்பிள்ளை சண்முகம்
177. யா/ந/ 6979 திருமதி. செல்வராணி கிருஷ்ணபிள்ளை
178. யா/ந/ 6988 திருமதி. முத்தம்மா இராமசாமி
179. யா/ந/ 7082 திரு. கோவிந்தபிள்ளை கந்தையா
180. யா/ந/ 7089 திருமதி. சாந்தி வரவேஸ்வரன்
181. யா/ந/ 7105 திரு. பிறெற்றிக் நோயல் ஏபிரகாம்
182. யா/ந/ 7129 திருமதி. இராசம்மா செல்லத்துரை
183. யா/ந/ 7134 திரு. ஜோன்பிள்ளை இரவீந்திரகுமார்
184. யா/ந/ 7155 திருமதி. சுகிர்தரத்தினம் கந்தையா
185. யா/ந/ 7168 திரு. வல்லிபுரம் சத்துருசிங்கம்
186. யா/ந/ 7180 திரு. தம்பிப்பிள்ளை ஆறுமுகம்
187. யா/ந/ 7204 திரு. சுந்தரராஜா பாலசுப்பிரமணியம்
188. யா/ந/ 7210 திரு. கிருஷ்ணர் குமாரசாமி
189. யா/ந/ 7218 திருமதி. இரத்தினம் ஆறுமுகம்
190. யா/ந/ 7269 திரு. சின்னப்பு சூசைப்பிள்ளை
191. யா/ந/ 7272 திரு. சவரிமுத்து ஜேம்ஸ்
192. யா/ந/ 7308 திரு. ஆதர்கணேசபிள்ளை ஜோசப்
193. யா/ந/ 7319 திரு. செல்லத்துரை பஞ்சாட்சரம்
194. யா/ந/ 7360 திருமதி. சுமதி தெய்வேந்திரன்
195. யா/ந/ 7367 செல்வி. சுகந்தி தியாகராஜா
196. யா/ந/ 7520 திரு. சுவாம்பிள்ளை மார்க்கண்டு
197. யா/ந/ 7528 திரு. காசிப்பிள்ளை சத்தியதீசன்
198. யா/ந/ 7581 திரு. நாகலிங்கம் கந்தசாமி
199. யா/ந/ 7585 திரு. ஆறுமுகம் அருளானந்தம்
200. யா/ந/ 7607 திருமதி. பூரணம் செல்லப்பா
201. யா/ந/ 7626 திரு. இரத்தினம் குமாரதாஸ்
202. யா/ந/ 7634 திருமதி. பூபதி சிற்றம்பலம்
203. யா/ந/ 7660 திருமதி. அருளம்மா கந்தசாமி
204. யா/ந/ 7668 திரு. கந்தையா சண்முகராசா
205. யா/ந/ 7672 திரு. இரத்தினம் சிவநாதன்
206. யா/ந/ 7737 திரு. வைரவநாதன் கந்தசாமி
207. யா/ந/ 7852 திரு. வில்வரசரட்ணம் சுப்பையாஸ்ரீபன்
208. யா/ந/ 7853 திருமதி. மேரி கனகசுந்தரம்
209. யா/ந/ 7863 திரு. செல்லப்பா கனகரட்ணம்
210. யா/ந/ 7873 திருமதி. தங்கலட்சுமி இராசையா
211. யா/ந/ 7904 திரு. நாகமணி நடராசா
212. யா/ந/ 7932 திருமதி. பரமேஸ்வரி தம்பிப்பிள்ளை
213. யா/ந/ 8017 திரு. செபஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
214. யா/ந/ 8022 திருமதி. சிவபாக்கியவல்லி நடராஜா
215. யா/ந/ 8030 திருமதி. பாறுபதிப்பிள்ளை தம்பிப்பிள்ளை
216. யா/ந/ 8055 திருமதி. கனகம்மா அரசரத்தினம்
217. யா/ந/ 8081 திருமதி. செல்லம்மா சோமசுந்தரம்
218. யா/ந/ 8128 திரு. லோறன்ஸ்பிலிப் அலோசியஸ்
219. யா/ந/ 8199 திரு. செல்லப்பா தில்லையம்பலம்
220. யா/ந/ 8211 திருமதி. சிவகாமிப்பிள்ளை வைரவநாதன்
221. யா/ந/ 8214 திருமதி. செல்லம்மா கந்தையா
222. யா/ந/ 8240 திரு. சின்னத்தம்பி நவரெத்தினம்
223. யா/ந/ 8251 திரு. சுப்பிரமணியம் முருகேசு

(தொடரும்..)

# சிறந்த வீரர் விருதுக்கு சோபர்ஸின் பெயர்



சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் மிகவும் கௌரவமிக்க ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர் விருதுக்கு மேற்கிந் தியத் தீவுகளின் சர்கார்:.பீல்ட் சோபர்ஸின் பெயர் வைக் கப்பட்டுள்ளது.

இதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவில் இடம் பெற்றிருந்த ரிச்சி பெனாட், சுனில் கவாஸ்கர், மைக்கல் ஹோல்டிங் ஆகியோர் சோபர்ஸின் பெயரை பரிந்துரைத் துள்ளதாக கவுன்சில் தெரிவித்துள்ளது.

# சுற்றுப்பயணங்களில் வெற்றியும் தோல்வியும் வரும்

# சிறிலங்காவுடனான தோல்வியும் அதுபோன்றதொன்றே

## தென்னாபிரிக்கப் பயிற்சியாளர் எரிக்சைமன்

சிறிலங்காவுக்கான சுற்றுலா வில் தென்னாபிரிக்க அணி 1-0 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரிலும் 5-0 என்ற கணக்கில் ஒருநாள் போட்டிகளிலும் தோல்வியடைந்ததை யடுத்து அவ்வணியின் பயிற்றுவிப்பாளர் எரிக்சைமன் பதவி விலகுவார் என்ற பத்திரிகைச் செய்தியை சைமன் மறுத்துள்ளார்.

நாடுதிரும்பிய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவிக்கும்போது தனது தென்னாபிரிக்க அணியின் தோல்விகளுக்குத் தான் பொறுப்பேற்பதாகவும், ஆயினும் பதவிவிலகுவது என்ற செய்தியில் உண்மையில்லை என்று தெரிவித்துள்ளார்.

இந்தத் தோல்விகள் பற்றி எனது கருத்தையே கிரிக்கெட் சபையும் கூறியிருக்கிறது. அதாவது அணியை மாற்றியமைக்க வேண்டும், அல்லது முகாமைத்துவம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றார்.


இத்தோல்வி தொடர்பாக அந்நாட்டு கிரிக் கெட்சபைத்தலைவர் தெரிவிக்கையில், சுற்றுப் பயணங்கள் வெற்றியையும் தரலாம் தோல்வியையும், தரலாம். இது தோல்வியான சுற்றுத் தொடர் என்று கருத வேண்டும் என்றார்.



இந்தச் சுற்றுப்பயணம் ஏமாற்றத்தைத் தந்தாலும் இங்கிலாந்து ஐ.சி.சி சுற்றுத் தொடரில் வென்று கிண்ணத்துடன் நாடு திரும்ப வேண்டும் என அவர்களுக்கு உற்சாகமூட்டி வழி யனுப்பி வைத்தார் சைமன்.

தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் இங்கிலாந்து நோக்கிப் பயணமாகியது.

# சச்சின் இல்லாதது கவலை அளிக்கிறது



### கங்குலி

நட்வெஸ்ட்டி ராபியை இழந்தது மிகவும் கவலை அளிக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்திய அணி வெற்றி மேல் வெற்றிபெற்று வந்தது. இப்போதோ சில போட்டிகளில் தொடர்ந்து தோல்வி அடைவது வேதனையை அளிக்கிறது. நமது இக்கட்டான நிலையில் வெற்றி இலக்கை எட்டக் கூடிய திறமை தற்போது குறைந்து விட்டது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். சேவக் சுத்தமாக தயார் இல்லை.

சச்சினும் காயம் காரணமாக அணியில் இல்லாததால் தொடக் கத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. ஆடடக்காரர்கள் நிலைத்து நின்று ஆடினால்தான் அடுத்து வரும் வீரர்களும் எந்தவிதமான நெருக்கடியும் இல்லாமல் ஓட்டங்களை குவிக்க முடியும். ஆனால் இதை நமது அணி சரியாக செய்யத் தவறியது தோல்விக்குக் காரணமாக அமைந்தது.

இந்தத் தொடரில் ஹர்பஜன் சிறப்பாக பந்து வீசினார். அதே போல் துடுப்பாட்டத்திலும் இவர் நன்றாக செயற்பட்டார்.ஓவலில் இரண்டாவது போட்டியில், அணி தோல்வியை நோக்கி சென்று கொண்டிருந்தபோதும் கடைசி விக்கெட்டுக்கு வந்த ஹர்பஜன்சிங் மன உறுதியுடன் ஆடினார். இவரது ஆட்டத்தில் இருந்து நாங்கள் புதிய பாடம் கற்றுக் கொண்டுள்ளோம். பிளின்டொப் சகலதுறை வீரராக வளர்ச்சி அடைந்துள்ளார். பந்து வீச்சு, துடுப்பாட்டம் இரண்டிலும் நன்றாக செயற்பட்டு வருகிறார்.

இவரது ஆட்டம் இங்கிலாந்து அணிக்கு கூடுதல் வலு சேர்க்கிறது. இப்போது எங் கள் கவனமெல்லாம் சம்பியன்ஸ் கிண்ணத்தில்தான். சச்சின் அணியில் இல்லாதது மிக வும் கவலையை அளிக்கிறது. ஆனாலும் நட்வெஸ்ட் தோல்வியில் நாங்கள் நிறையப் பாடங்கள் கற்றுக்கொண்டுள்ளோம். இதனால் சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில் சாதிக்க முடியும் என நம்புகிறேன் என்றார்.

# சச்சின் விளையாடாதது தோல்விக்கு காரணமல்ல

### சுனில் கவாஸ்கர்



இங்கிலாந்து அணியுடனான நட்வெஸ்ட் ஒருநாள் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் விளையாடாதது தோல்விக்குக் காரணம் அல்ல என முன்னாள் இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் சுனில் கவாஸ்கர் தெரிவித் துள்ளார்.

இங்கிலாந்து அணியுடனான நட்வெஸ்ட் ஒருநாள் போட்டியில் இந்தியா 2-1 என்ற அடிப்படையில் தோல்வி அடைந்தது உபாதை காரணமாக நேற்று முன்தினம் போட்டியிலும் சச்சின் விளையாடவில்லை.


எனினும் இறுதிப் போட்டியில் இந்தியா 23 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

உபாதைக்கு உள்ளாகியுள்ள டெண் டுல்கர் எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாக வுள்ள ஐ.சி.சி சம்பியன் கிண்ண போட்டி யிலும் விளையாட மாட்டார் என எதிர்பார்க் கப்படுகிறது.

இந்நிலையில் சச்சின் டெண டுல்கர் இல் லாமல் இந்திய அணி மூன் றாவது போட்டி யில் வெற்றிகர மாக விளையாடி யுள்ளதாக சுனில் கவாஸ்கர் தெரிவித்தார்.




# உலகில் எந்தவொரு அணியையும் எதிர்கொள்ளத் தயார்-அத்தப்பத்து



தற்போது அணி இருக்கும் நிலையில் உலகில் எந்த பிரபல அணியையும் முகம் கொடுக் கத் தயாராக இருப்பதாக சிறிலங்கா கிரிக்கெட் அணித்தலைவர் மாவன் அத்தப்பத்து தெரிவித் துள்ளார். 2002 ஆம் ஆண்டு சிறிலங்காவில் நடைபெற்ற மினி உலகக்கிண்ண தொடரை இந்தியாவுடன் பகிர்ந்துகொண்ட சிறிலங்கா அணி வரும் 10 ஆம் திகதி இங்கிலாந்தில் ஆரம்பமாகும் 4 ஆவது போட்டித் தொடரில் பங்கேற்க சென்றுள்ளது.

அங்கு செல்ல முன்பு செய்தியாளருக்கு அளித்த போட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு செல்லும் அணியில் நட்சத்திர பந்து வீச்சாளர் முரளிதரன் காயங் காரணமாக இடம்பெறவில்லை. அதற்குப் பதிலாக கௌசல்யா லொக்கு ஆராச்சி இணைந்துள்ளார். அத்துடன் தென்னாபிரிக்காவுடனான 5 ஆவது ஒரு நாள் போட்டியில் விரலில் காயமடைந்த திலகரத்ன தில்சானும் இவ்வணியில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரபல கால்பந்து வீரர்ரொனால்டோ திருமண பந்தத்தில் இணைந்தார்



பிறேசில் அணியின் மிகவும் பிரபலமான வீரரான ரொனால்டோவுக்கு நேற்றுத் திருமணம் நடைபெற்றது. அவரது இரண்டாவது காதலியோடு நான்கு வருடத்தின் பின்னர் திருமணத்தில் இணைந் துள்ளார். அவர் நான்கு வருடத்துக்கு முன்னர் திருமணபந்தத்தில் இருந்து பிரிந்திருந்தார்.

அவர் தெரிவிக்கையில்; இந்தக் காதலி தனக்கு உற்சாகத்தை அளிப்பதாகவும், இதன் மூலம் தான் தற்போது திறமையாக விளை யாடி வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை நேற்று முன்தினம் தென்னமெரிக்க வலய உலகக் கிண்ண கால்பந்து தகுதிகாண் போட்டியில் பிறேசில் அணி வெற்றி பெற்றது. பொலிவியாவை 3-1 என்ற நிலையில் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியின் பின்னர் ஜேர்மன் சென்று பிறேசில் அணி விளையாடவுள்ளது. அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி ரொனால்டோ செல்கின்றார்.

# இந்தியாவுக்கு 10 பதக்கங்கள்

2012 ஒலிம்பிக்கில் இந்தியா வுக்கு 10 பதக்கங்கள் கிடைக் கும் என்று தமிழ்நாடு விளை யாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் பி.டபிள்யூ. சி.டேவிதார் நம்பிக்கை தெரி வித்தார்.

பதக்கம் பெறுவோரில் 9பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர் களாக இருப்பார்கள் என்றார் அவர். ' ரத்தோர்கள் பிறப் பதில்லை உருவாக்கப்படு கிறார்கள் என்ற தலைப்பில் ஒலிம்பிக்கில் இந்தியாவின் பின்தங்கிய நிலை குறித்த பள்ளி மாணவர்கள், பெற்றோர்- உடற்கல்வி ஆசிரியர்கள் பங்கேற்ற விடியோகன்பரன்சிங் கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது ரிலை யன்ஸ் இந்தியா மொபைல் நிறுவனம்.

விளையாட்டுத் துறைக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும். கிரிக்கெட்டைப் போன்ற பிற விளையாட்டுக்களுக்கும் முக் கியத்துவம் தருவதுடன் அதி களவு ஸ்பான்ஸார்ஷிப் வழங்க வேண்டும்.

பள்ளிப் பாடத்திட்டத்தில் உடற்கல்வியை கட்டாயப் பாட மாக வைக்க வேண்டும். உடற் கல்விக்கென அதிக பயிற்சி யாளர்களை நியமிக்க வேண் டும். என்பன உள்ளிட்ட பல் வேறு ஆலோசனைகள் தெரி விக்கப்பட்டன.

# தொடர்ச்சியான சர்வதேச போட்டிகளே வீரர்களின் உபாதைக்குக் காரணம்

### இசான்மணி

சர்வதேச மட்டத்தில் தொடர்ச்சியாகப் போட்டிகள் நடைபெற்று வருவதன் காரணமாகவே பல வீரர்கள் உபாதைக்கு உள்ளாவதாக சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத் தலைவர் இசான்மணி சுட்டிக்காட்டி யுள்ளார்.

இது உண்மையாகவே நிறுத்தப்படவேண்டும். இதில் அவுஸ்திரேலிய அணி தன்னை திருத்திக்கொண்டுள்ளது. இதன் காரணமாகத் தனக்கு ஏதுவான வகையில் போட்டி நிர்ணயங்களில் ஈடுபட்டு வருவதுடன், ஒரு வீரருக்கு 150 நாட்களுக்கு கடந்த வருடத்தில் ஓய்வு வழங்கப்பட் டுள்ளது.

இதனை ஏனைய நாடுகளும் பின்பற்றிச் சிறப்பான முறையில் போட்டிகள் இடம்பெறும் காலஅட்டவணைகளை அவர்கள் தயார்படுத்திக் கொண்டார்கள் என்றால் வீரர்களை உபாதைகளில் இருந்து தவிர்த்துக் கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இந்திய கால்பந்து அணித்தலைவர் பூடியாவுக்கு காலில் அறுவைச்சிகிச்சை

முழங்காலில் அறுவைச்சிகிச்சை செய்து கொண்டுள்ளதால் உலகக்கோப்பைக் கால்பந்து தகுதிப்போட்டியில் பாய்சுங் பூடியா விளையாட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

இந்தியக் கால்பந்து அணியின் தலைவரான பூடியாவுக்குக் கடந்த 31ஆம் திகதி இடது முழங்காலில் அறுவைச்சிகிச்சை மேற்கொள் ளப்பட்டுள்ளது.

இதையடுத்து வரும் 8ஆம் திகதி ஜப்பானுக்கு எதிரான உலகக்கோப்பை தகுதிப்போட்டியிலும், 15ஆம் திகதி நடைபெறும் ஆசியக்கோப்பைப் போட்டியிலும் (மேற்கு வங்க அணிக்காக) அவர் விளையாட மாட்டார்.

வியட்னாமில் சமீபத்தில் நடைபெற்ற எல்.ஜி. கோப்பை போட்டியின் போது பூடியாவுக்கு முழங்காலில் காயம் ஏற்பட்டது.

'தசைக் கிழிவு எப்படியிருந் தாலும் கால்பந்து வீரருக்கு அது நல்லதல்ல. ஆனால் குணமானதும் அவரால் விளையாட முடியும். குண மாவதற்குக் குறைந்தது 3முதல் 6வாரகாலம் ஆகும்' என அவருக்குச் சிகிச்சை அளித்த தேபாஷிஷ் சட்டர்ஜி கருத்துத் தெரிவித்துள்ளார்.

## சிந்தனைக்கு



கட்டி எழுப்பப்படவுள்ள தமிழீழத்தின் வளர்ச்சிக்கும் ஆயுதத்தை மட்டும் நம்பியிராமல் அனைத்துத்துறைகளிலுமே வளரவேண்டும் என்பதில் நான அக்கறையாக உள்ளேன்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 07-09-2004
மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

## தமிழரின் பிரச்சினையைத் தீர்க்க அல்ல

"பேச்சுவார்த்தைகள் காலம் கடந்துசெல்வது நாட்டில் விபரீதத்தை ஏற்படுத்தும், ஆகையினால் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு" என்ற பிரதமர் மகிந்தராஜபக்ஷவின் கூற்றுக்கள் நாடு எதிர்நோக்கியுள்ள நெருக்கடியை ஆளும்தரப்பு குறிப்பாகச் சிறிலங்கா சுதந்திரக்கட்சி புரிந்து கொண்டுள்ளது போன்றே உள்ளது.

இதனைச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் தெளிவாக உணர்ந்துகொண்டுள்ளதாகவே எண்ணக்கிடக்கின்றது. லண்டனில் இருந்து நாடுதிரும்பிய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப்புலிகளுடன் விரைவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவித்துள்ளமையும், பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது குறித்து ஐ.தே.கட்சி உட்பட எதிர்க்கட்சிகளுடன் இருவார காலத்திற்குள் பேச்சுக்கள் நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளமையும் இதன்வெளிப்பாடே ஆகும்.

ஆனால், பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படாது போனால் நாட்டில் விபரீதங்கள் ஏற்பட்டுவிடும் என்ற எச்சரிக்கையானது நாட்டில் மீண்டும் யுத்தம் ஆரம்பித்துவிடும் என்பதனால் எழுந்ததல்ல. சிறிலங்கா அரசாங்கம் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியினால் எழுந்ததொன்றாகும். அதாவது இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருப்பதன் வெளிப்பாடாகும்.

இலங்கையின் இன்றைய பொருளாதாரமானது எரிபொருள் விலையேற்றம், விலைவாசி ஏற்றம் என்பனவற்றோடு நாட்டின் பெரும்பாகத்தில் நிலவும் கடும் வரட்சி காரணமாகவும் பெரும் சவாலைச் சந்தித்தவண்ணம் உள்ளது. இந்நிலை இன்னும் சிறிது காலத்திற்கு நீடிப்பின் பிரதமர் மகிந்தராஜ பக்ஷ கூறியதுபோன்று நாட்டில் பெரும் விபரீதம் ஏற்பட வாய்ப்புண்டு.

முன்னைய பொ.ஐ.முன்னணி அரசாங்கம் நடாத்திய யுத்தத்தினால் நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்தில் வீழ்ந்தது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சிவீதம் எதிர்க்கணியமாகச் செல்லும் அளவிற்கு நிலை இருந்தது. பொ.ஐ.முன்னணி அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கும் அது அடிப்படையானது.

ஆனால், அதன் பின்னர் ஆட்சிக்குவந்த ஐ.தே.முன்னணி அரசாங்கம் பொருளாதார நிலைமைகளைச் சீர்படுத்த மேற்கொண்ட முயற்சி ஓரளவு நெருக்கடியைத் தளர்த்த உதவினாலும் பொருளாதாரத்தை வளர்ச்சிப்பாதையில் கொண்டுசெல்ல இயலவில்லை. இதற்காகவே டோக்கியோ நிதியைப் பெறுவதற்கு ஐ.தே.முன்னணி முயன்றது. ஆனால் ஆட்சிக்கவிழ்ப்பு இச்சந்தர்ப்பத்தை இல்லாது ஒழித்தது.

இதுஒருபுறமிருக்க இயற்கையும் சந்திரிகா அரசிற்கு எதிரானதாகவே இருக்கிறது. அதாவது இலங்கையில் நிலவும் கடும் வரட்சிநிலை காரணமாக உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அத்தோடு மின்சார விநியோகத்திலும் வெட்டுக்கள் ஏற்பட்டன. இது ஏற்கனவே நலிவுற்றிருந்த பொருளாதாரத்தை மேலும் பாதிப்பிற்குள்ளாக்கியது.

இந்நிலையில், ஆட்சிக்கு வந்த ஐ.ம.சு.முன்ன்ணி அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகக் குழப்பமான அணுகுமுறையைக் கொண்டிருந்தமை மீண்டும் பொருளாதாரத்தை வெகுவாகப் பாதிக்கத் தொடங்கியது. பொருளாதார நிலையைச் சீர் செய்வதென்பது சவால் நிறைந்ததொன்றாகியது.

அது மட்டுமல்ல, சர்வதேச ரீதியில் பெற்றோலியப் பொருட்களுக்கு ஏற்பட்ட விலை அதிகரிப்பானது சிறிலங்காவைப் பெரிதாகப் பாதித்தது. அரசாங்கத்தால் எரிபொருள் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனமை காரணமாக அனைத்துப் பொருட்களுக்குமான விலையும் அதிகரிக்க, வாழ்க்கைச் செலவு கட்டுக்கடங்காத நிலையில் எகிறிச் சென்றது.

இதேவேளை தாம் ஆட்சிக்கு வந்தால் விலை வாசி ஏற்றம் கட்டுப்படுத்தப்படும் ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படும் என வாக்குறுதி வழங்கி ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தினால் இவற்றை நிறைவேற்ற முடியாமல் போனது இது ஐ.ம.சு முன்னணிக்கு வாக்களித்தவர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்ததோடு அரசிற்கெதிராகப் போராடும் நிலைக்கும் கொண்டு வந்துள்ளது.

இதனைப் புரிந்து கொண்டே பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சமாதானப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படாது போனால் விபரீத விளைவுகளை சந்திக்க வேண்டிவரலாம் என எச்சரிக்கும் நிலையேற்பட்டுள்ளது. அதாவது மக்கள் வாழ்க்கைச் செலவை எதிர்த்தும் சம்பள உயர்வுகோரியும் வீதியில் இறங்கிப் போராடும் நிலை வரின் அரசாங்கம் பெரும் சவாலை சந்திக்கவேண்டிவரும்.

இத்தகையதொரு நிலையில்தான் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து அரசாங்கத் தரப்பில் அதிகம் பேசப்படத்தொடங்கியுள்ளது. யுத்தத்தினாலோ அன்றி வேறு விதத்தினாலோ நாடு மீள முடியாததொரு கட்டத்திற்குச் செல்லும் போதே ஆளும் தரப்பினர் பேச்சுவார்த்தையை நாடுகின்றனர். அதாவது தமது நெருக்கடிகளைத் தீர்த்துக் கொள்ள பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராகின்றாரொழிய தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க அவர்கள் பேச்சுவார்த்தைக்கு என்றும் தயாரானதில்லை.

# பொருட்களின் விலை தொடர்ந்து அதிகரிப்பின் நாம் வெளியில் தலைகாட்ட முடியாது

### -அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே

சிறிலங்காவில் அத்தியாவசியப் பொருட்களின் விலை இந்த வகையில் அதிகரிக்குமாயின் நாம் வெளியில் தலைகாட்ட முடியாது என வர்த்தகவாணிப நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். தென்பகுதி அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்ற தும்புத் தொழிற்சாலையை திறந்து வைத்தபோது அவர் மேலும் கூறுயதாவது

நாம் உடனடியாக சீனி, அரிசி போன்றவற்றின் விலைகளைக் குறைக்கலாம்.

ஆயினும் அடுத்த நிமிடமே விவசாயிகள் விசம் அருந்துவர் விவசாயிகளின் உற்பத்திக்கு நல்ல சந்தை வாய்ப்பு கிடைப்பதற்காகவே நாம் பொருட்களின் விலைகளைக் குறைக்கவில்லை எனத் தெரிவித்தார். பொதுமக்களுக்கு நாம் நிவாரணத்தை அளிக்கவே விரும்புகிறோம் ஆயினும், வர்த்தகர்கள் மக்களைச் சுரண்டிச் சாப்பிடுகின்றனர் என்றார். எமது கூட்டணி மக்களை மறந்துவிடவில்லை என்று கூறிய அவர் பொதுமக்களின் பசியை அரசு அறிவதாகவும், அதிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் எனவும் கூறினார்.

# இந்தியாவிலிருந்தும் 25 ஆயிரம்தொன் அரிசி இறக்குமதி செய்ய முடிவு

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம இந்தியாவிலிருந்து 25 தொன் அரிசியை இறக்குமதி செய்ய முடிவெடுத்துள்ளதாக வர்த்தக வாணிபத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே பாகிஸ்தானிலிருந்து 50 ஆயிரம் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அரிசியின் விலை நாட்டில் அதிகரித்திருப்பதால் இந் நடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அமைச்சு கூறுகின்றது.இறக்குமதி செய்யப்படும் அரிசி கிலோ30ரூபா விற்பனை செய்யப்படுமெனவும் அமைச்சு வட்டாரங்கள் கூறுகின்றன.

# சந்திரிகா மீண்டும் சனாதிபதியாகும் வகையிலான அரசியலமைப்புத் திருத்தத்திற்கு அமைச்சர்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் சனாதிபதியாகும் வகையில் அரசியலமைப்பில் திருத்தம் செய்யப்படுவதை நான்கு சிரேஷ்ட அமைச்சர்கள் விரும்பவில்லை என வேறொரு சிரேஷ்ட அமைச்சர் சிங்களப்பத்திரிக்கை ஒன்றிற்குத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைக்கு இவர்கள் கண்டனம் தெரிவித்து வருவதாகவும், இவர்கள் நால்வரும் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிட முயற்சி செய்பவர்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

இதனால் கட்சிக்குள் பிணக்குகள் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்

# முஸ்லிம் காங்கிரசுடன் அரசாங்கம் தனித்துப் பேச்சுக்களை நடத்த வேண்டும்

### அமைச்சர் அதாவுல்லா கூறுகிறார்

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் நடத்துவது போல் முஸ்லிம் காங்கிரசுடனும் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டுமென கிழக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சர் அதாவுல்லா தெரிவித்துள்ளார்.அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் கலந்துகொள்ளக் கூடாது அவர்கள் தனித்தே பேச்சுக்களில் ஈடுபடவேண்டு மென அதாவுல்லா மேலும் தெரிவித்துள்ளார்.

# அடையாளட்டை வழங்குவதற்கு புதிய நடைமுறைகள் கடைப்பிடிக்க முடிவு

(கொழும்பு)

ஆள் அடையாள அட்டைகளை பெறும்போது பாடசாலைகள் ஊடாகவும், கிராமசேவகர்கள் மூலமும் அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பங்களுக்கு புதிய நடைமுறைகளும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், விண்ணப்பத்தில் கோரப்படும் ஆவணங் களின் மூலப்பிரதியே இனிமேல் இணைக்கப்பட வேண்டுமெனவும், அவசர விண்ணப்பங்கள் தீவிரமாக பரிசீலிக்கப்படுமெனவும் புதிய ஆணையாளர் தெரிவித்துள்ளார். ஆட்பதிவுத் திணைக்களம் போலியான அடையாள அட்டைகளை அதிகமாக வழங்கிவருவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அதிகாரிகள் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதையடுத்தே புதிய நடைமுறைகள் அமுலுக்கு வரவுள்ளதாக தெரியவந்துள்ளது. அண்மையில் கொள்ளுப்பிட்டியில் இடம் பெற்ற குண்டுவெடிப்பில் ஈடுபட்டவருக்கு போலி அடையாளஅட்டை வழங்கப்பட்டதாக வெளியான தகவலை அடுத்தே இந்த நடைமுறை பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (32)

# ரவி கருணாநாயக்கவிற்கு நீதிமன்றம் அழைப்பாணை

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் அமைச்ச்ர் ரவி கருணாநாயக்கவுக்கும் அவரது அமைச்சு செயலாளருக்கும் நீதிமன்றினால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.ரவி கருணநாயக்காவையும் செயலாளர் கர்ஷ விக்கிரசிங்கவையும் இம்மாதம் 14 ஆம்திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு கோட்டை நீதவான் இந்த அழைப்பாணையைப் பிறப்பித்துள்ளார். மேலதிக விசாரணைகளுக்கு முன்னாள் அமைச்சரும் அவரது செயலாளரும் தேவையென விசேடகுற்றப் புலனாய்வுப் பிரிவினர் கோரிக்கை சமர்ப்பித்ததையடுத்து இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# 11 கிலோ நிறையுடைய போதைப்பொருள் ஹிங்குராங் கொடவில் கைப்பற்றப்பட்டது

பெருமளவு ஹெரோயின் போதைப்பொருள் நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. சுமார் 11 கிலோ கிராம் நிறையுடைய போதைப் பொருளை ஹிங்குராங்கொடப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். முச்சக்கர வண்டியொன்றில் கடத்திச்செல்லப்பட்ட போது இந்தப் போதைப்பொருள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் கைப்பற்றப்பட்ட மிகப் பெரிய அளவிலான போதைப் பொருள் தொகுதி இதுவெனக் குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். நேற்று கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் பெறுமதி சுமார் 2 கோடியே 20 இலட்சம் எனமதிப்பிடப்பட்டுள்ளது.

(32)

# கல்விசாரா ஊழியர் போராட்டத்தை நிறுத்த எடுத்த முயற்சி தோல்வி

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் போராட்டத்தை நிறுத்துவதற்காக நடத்தப்பட்ட மேலும் ஒரு பேச்சுவார்த்தை நேற்று தோல்வி அடைந்துள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழகங்களின் ஒன்றிணைந்த கூட்டமைப்பிற்கும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிற்கும் இடையே இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் இந்தப் போராட்டம் நேற்று ஆறாவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்றது.

இதேவேளை நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தமையால் தமது போராட்டம் தொடருமென கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்க சம்மேளனத்தின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

# வவு.நகரில் கழிவுப் பொருட்கள் ஒருவாரமாக அகற்றப்படவில்லை

## எங்கே கொட்டுவது என்ற பிரச்சினையின் எதிரொலி



(படம்: மகா)

(செட்டிகுளம்)

வவுனியா நகரின் கழிவு பொருட்கள் ஒருவாரமாக அகற்றப்படவில்லை. இதன் காரணமாக வவுனியா நகரில் பரவலாக குப்பையும் கூழமுமாக இருக்கின்றது. இதன் காரணமாக துர்நாற்றமும் வீசுகின்றது. வவுனியா நகர்ப் பகுதியில் இருக்கின்ற கழிவுப் பொருட்களை அகற்றி இதுவரை காலமும் இராசேந்திரன் குளம் பகுதியில் கொட்டப்பட்டு வந்தது. இந்தப் பகுதியில் குப்பை கொட்டப் படுவதற்கு அப்பகுதி மக்கள் முற்றாக எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக நகரசபையினர் கழிவுப்பொருட்களை அகற்றி அப்புறப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டு இருக்கின்றது. பம்பைமடு பிரதேசத்தில் கழிவு பொருட்களை கொட்டுவதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான வேலைகள் நடைபெற்று கொண்டு இருப்பதாகவும் அதுவரை கழிவு பொருட்களை கொட்டுவதற்கு அனுமதிக்குமாறு தாம் கேட்டதாகவும் எனினும் மக்கள் சம்மதம் தெரிவிக்காததன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டு இருப்பதாக நகரசபைக்கணக்காளர் திரு. நடராசா கோணேஸ்வரநாதன் தெரிவித்தார். கடந்த மூன்று நாட்களாக வவுனியா நகர்ப் பகுதியில் இருந்து எந்த ஒரு கழிவுப் பொருட்களும் அகற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணப்படாத பட்சத்தில் பிரதேச வாசிகள் பெரும் சிரமத்திற்கு முகம் கொடுக்க நேரிடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (21)

# துணுக்காய் பாண்டியன்குளம் பிரதேசத்தில் காவல்துறை வீதி ஒழுங்கு நடவடிக்கைகள்

நேற்றுக் காலைமுதல் துணுக்காய் பாண்டியன்குளம் பிரதேசத்தில் தமிழீழ காவல்துறையினரால் வீதியொழுங்கு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இது குறித்துக் கருத்தூட்டலும், கண்காட்சியும் காலை 9.00 மணிக்கு மல்லாவி மத்திய கல்லூரியில் நிகழ்வு ஆரம்பமாகியது. முதலில் ஈகச் சுடரை மல்லாவி மத்திய கல்லூரி அதிபர் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக்கொடியை நிதித்துறையைச் சேர்ந்த அகிலன் ஏற்றிவைத்தார். இதன் பின் துணுக்காய் காவல் பணிமனைப் பொறுப்பாளர் தி.பகீரதன் தலைமையில் மண்டப நிகழ்வுகள் இடம்பெற்றது. கருத்தூட்டல் தொடர்பான அறிமுகவுரையை முல்லைத்தீவு மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் இ.றஞ்சித்குமார் நிகழ்த்தினார். ஆசியுரையை கோட்டக்கல்வி அதிகாரி சுந்தரமூர்த்தியும், சிறப்புரையை பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.புனிதன் அவர்களும் நிகழ்த்தினர். பின்னர் வீதி ஒழுங்குகள் தொடர்பான கருத்தூட்டலையும் செய்முறை விளக்கங்களையும் துணுக்காய்க் காவல் பணிமனைப் பொறுப்பாளர் இ.பகீரதன் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து கடந்த காலங்களில் ஏற்பட்ட வீதி விபத்துக்களின் போது ஏற்பட்ட கோரச் சம்பவங்களின் அவலத்தை விளக்கும் புகைப்படங்களும் போன்ற கண்காட்சிகள் நடைபெற்றது. சமகாலத்திலேயே துணுக்காய்ப் பிரதேச செயலகத்தில் இதே நிகழ்வு நடைபெற்றது.

இதில் துணுக்காய்ப் பிரதேச செயலர் உட்பட்ட அதிகாரிகள் பலர் பங்குபற்றினர்.

இந்நிகழ்வில் தமிழீழ காவல் துறையினரின் வாகனப்போக்குவரத்துக் கண்காணிப்பாளர் பு.கனகசிங்கம், துணுக்காய் காவல்பணிமனை துணைப்பொறுப்பாளர் கமல சிறிஸ்கரன் ஆகியோர் பங்குபற்றினர். பாண்டியன் குளம் பிரதேசத்தில் பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்தின் அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இதில் வாகனப்போக்குவரத்துப் பிரிவு கண்காணிப்பாளர் பு.கனகசிங்கம், துணுக்காய் காவல் பணிமனைப் பொறுப்பாளர் தி.பகீரதனும் பங்குகொண்டதுடன் வீதி ஒழுங்கு கருத்துக்களைத் தொடர்ந்து புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது. துணுக்காய், மல்லாவியில் ஆயிரம் பேர் வரையிலான ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்துகொண்டு பயன் பெற்றதுடன் அங்கு சமுகமளித் திருந்த காவல் துறையினருடன் கலந்து வீதி ஒழுங்கு தொடர்பான கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

# மக்களின் பாவனைக்கென பழுதடைந்த படகுகள் வழங்கல்

## நல்லவற்றை கடற்படை எடுத்துக்கொண்டது

அத்துமீறி மீன்பிடிக்கையில் தடுத்துவைக்கப்பட்டு நேற்றுமுன் தினம் தீவுப்பகுதி மக்களுக்கான பயணத்துக்காக வழங்கப்பட்ட 4 ரோலர்களும் பாவனைக்கு உதவாதவை எனத் தீவகப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இந்திய மீனவர்களிடம் இருந்து மொத்தமாக தடுத்து வைக்கப்பட்ட 58 ரோலர்களும் ஏலத்தில் விடப்படப்போவதாக அறிவிக்கப்பட்டமையை அடுத்து பாவனைக்கு உதவக்கூடிய 6 ரோலர்களை கடற்படையினர் தமது பாவனைக்கு எடுத்துள்ளனர். எனினும் மக்களின் பாவனைக்காக வழங்கப்பட்ட ரோலர்கள் பாவனைக்கு உதவாதவை எனத் தெரிய வந்துள்ளது. இவற்றைத் தீவுப் பகுதிக் கடற்படை தளங்களில் காணப்படும் ஒரு வகை புழுக்கள் சேதப்படுத்தியுள்ளதாகத் தீவுப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (32)

## கும்பாபிஷேகம்

முல்லை. மாவட்டம் குமரபுரம் சிறிசித்திரவேலாயுத சுவாமி கோவில் மகா கும்பாபிஷேகம் வரும் 10.09.2004 வெள்ளிக் கிழமை நடைபெறும்

கிரியைகள் நேற்றுக்காலை 07.05முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. யாக ஆரம்பம் நாளை புதன்கிழமையாகும். எண்ணெய்க்காப்பு 09ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.00 மணிமுதல் இரவு 7.00 மணி வரையுமாகும் என ஆலய பரிபாலன. சபையினர் தெரிவிக்கின்றனர்.

## கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டக் கல்விக் குழுக் கூட்டமும், சுகாதாரக் குழுக்கூட்டமும் இன்று பகல் 10.30 மணிக்கு கிளி.அரச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிளி.மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி கூட்டத்திற்கு சம்பந்தப்பட்ட திணைக்களை மற்றும் துறைசார் அதிகாரிகளை தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கிளி.மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் வேண்டியுள்ளார்.

(சோ,கு)

## வல்லைவெளி...

கொண்டு வந்திராத போதிலும் பருத்தித்துறை நீதவான் அரியநாயகத்தின் பணிப்பின் பேரில் நெல்லியடிப்பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அத்துடன் அப்பகுதிப்பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டது.

இதனிடையே மேற்படி பகுதியில் அண்மையில் சடலமொன்றை அடக்கஞ்செய்ததாக தெரிவிக்கப்படும் நபர்கள் சிலரை மேலதிக விசாரணைகளுக்கென நெல்லியடிப் பொலிசார் அழைத்துள்ளனர்.

இச்சம்பவங்களிடையே மேற்படி மனித எலும்புக் கூட்டுத்தொகுதி கண்டு பிடிக்கப்பட்டமை தொடர்பாக விடுதலைப்புலிகளின் வடமராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.தயா இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகளது கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு விஜயம் செய்த அவ் அதிகாரிகள் எலும்புக்கூட்டுத்தொகுதியினைப் பார்வையிட்டதுடன் நெல்லியடிப் பொலிசாருடனும் இது தொடர்பாகப் பேச்சுக்களை நடாத்தியுள்ளனர். (27)

## இடைக்கால....

சாங்கத்திற்கு ஆதரவளிக்கவுள்ளது. நாளை பாராளுமன்ற அமர்வில் நிதி மீளமைப்பு தொடர்பான விவாதம் நடைபெறவுள்ளது. இதே வேளை தேர்தல் வாக்களிப்பின் போது அடையாள அட்டைகளை பயன்படுத்துவது தொடர்பான விவாதம் அடுத்த பாராளுமன்ற அமர்வில் நடை பெற வேண்டும் எனக் கட்சி தலைவர்கள் நேற்றுத் தீர்மானித்துள்ளனர். (32)

## தமிழ்...

நிகழ்த்தினார். அவர் தனது உரையில் ஆரம்ப காலத்தில் தமிழ் இனம் அழிக்கப்படுகின்ற போது தமிழ் இளைஞர்கள் என்ன செய்வதெனத் தெரியாது நின்றபோதுதான் ஆயுதம் ஏந்திப்போராட முற்பட்டார்கள். அவர்களது போராட்டம் இன்று தமிழ் இனத்துக்கான ஒரு தன்னாட்சி அதிகாரசபையை வேண்டி நிற்கிறது. தமிழ் மாணவர்கள் தான் எமது தமிழ் இனத்தின் தலைவர்கள் என்பதை எவராலும் மறுக்க முடியாது இன்று தமிழீழ மாணவர் பேரவையின் ஊடாக எவ்வளவோ பாரிய செயற்பாடுகளை மாணவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். இந்த மாணவர்கள்தான் நாளைய தலைவர்கள். இந்த மாணவர்களது பிரச்சினைதான் இந்த நாட்டினது பிரச்சினை, இந்த நாட்டின் பிரச்சினை தான் இந்த மாணவர்களது பிரச்சினை. எனவே மாணவர்கள்தான் தமிழ் இனத்தினது பிரச்சினையை வென்றெடுக்க வேண்டும் நீங்கள் நாட்டுக்காகப் போராடி ஒரு சிறந்த தலைமையைப் பெற்றுள்ளீர்கள் இதனூடாக எமது உரிமைணையும் பெற வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து சிறப்புரையை யாழ்.வலய கல்விப்பணிப்பாளர் விக்கினேஸ்வரன், யாழ். மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ஆர்வலன், யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். செல்வக் குமார் இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் பஞ்சலிங்கம். ஆசிரியர் வரதராஜர் ஆகியோர் நிகழ்த்தினர். (36)

## தொண்டமானை...

படுத்துப் போவதே காரணம் என்ற தகவல் தொடர்பில் ஜே.வி.பி யின் உறுப்பினர்கள் தமது விளக்கத்தை கோரியுள்ளனர். அந்த வேளையில் சிறிலங்கா சுதந்திர கட்சியினருக்கும் ஜே வி பினருக்கும் வாக்குவாதம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. அதேநேரம் அரசாங்கத்தில் இணைந்துள்ள ஆறுமுகம் தொண்டமான் வடிகால் அமைப்புத் தொடர்பில் இந்திய நிறுவனம் ஒன்றுடன் கொண்டுள்ள உறவுகள் குறித்தும், இந்த கூட்டத்தில் பல அதிருப்தி- நிலைக் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது (32)

## வாக்குறுதிகளை...

னும் இரண்டு வருடங்களுக்கு துன்பத்தை அனுபவிக்க முடியாது. பிரதிபலன்களை வழங்கமுடியாது போனால் அதற்குப் பதிலாக நாட்டை யுத்தம் ஒன்றிற்கு இட்டுச் செல்ல வேண்டாம் என கேட்டுக்கொள்கின்றேன்.

சனநாயக வழியில் ஆட்சி செய்த எங்கள் கட்சி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் ஒரே நாட்களில் ஆட்சியில் அடுத்து வரும் மூன்று மாதங்களுக்குள் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து பெரும்பான்மை கொண்ட அரசாங்கம் ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சி அமைக்கும். அத்துடன் நாட்டிற்கு அவசியமான சக்திமிக்க பொருளாதாரமும் கட்டியெழுப்பப்படும். நாட்டின் பொருளாதாரத்தை இன்றைய அரசு கேள்விக்குறியாக்கி விட்டது. சமாதான முனைப்புகளும் தெளிவற்ற போக்கில் சென்று கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் இதனை மீளமைக்கக் கூடிய வலிமை ஐக்கிய தேசியக் கட்சிக்கே இருக்கிறது. தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனையை மையமாகக் கொண்டு சமாதானப் பேச்சு வார்த்தைகளை அரசாங்கம் உடனடியாக ஆரம்பிக்காவிட்டால் நாடு பல பின்னடைவுகளைச் சந்திக்கும் என்றார்.

இதேவேளை புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்கப்போவதாக ரணில் விக்கிரமசிய்க குறிப்பிட்டுள்ளதற்கும் சனாதிபதி சந்திரிகாவுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும் இடையிலான முறுகலுக்கும் இடையில் தொடர்புகள் இருக்கலாம் என்பது குறித்து கொழும்பின் ராஜதந்திர தரப்புகள் கவனத்தில் கொண்டுள்ளன.(32)

உங்கள் வயது 16 தொடக்கம் 20 எனில் தடுப்பு மருந்தேற்றும் நிலையங்களிற்கு விரைந்துசென்று தடுப்பு மருந்தேற்றிப் பூரண பாதுகாப்புப் பெற்றிடுவீர்

தமிழீழ சுகாதார சேவைகள்

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 07ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.